282 / நூ-தொ / நந்தி நிகண்டு 1
80 ] ந-நி
1

நந்திஸ்வரர் நிகண்டு 300

பக்கம் 54

10

62

S.311

உ

குமரன் றுணை.

# நந்தீஸ்வரர் அருளிச்செய்த

# நிகண்டு நூல்.

மதுரை யானைக்கல்தெரு வித்துவான்

மூ. குழந்தைவேலுப்பிள்ளை யவர்கள்

விருப்பத்தின்படி:

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப் பெற்று:

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1918.

Registered Copy Right.

இதன் விலை] [அணா 12.

உ

குமரன் றுணை.

# நந்தீஸ்வரர் திருவாய்மலர்ந்தருளிய

# நிகண்டு நா.

S. 31

காப்பு.

வெள்ளியங் கிரியான் தந்த வேழமா முகனே யெந்தன்
உள்ளினுக் குள்ளாய் நாளும் உருவினுக் குருவாய் நின்று
வள்ளலாய் நீயு வந்தே வாக்கது கொடுத்து மேலும்
பிள்ளைபோற் பாது காக்கப் பிரியமாய்ப் போற்று வேனே. (1)

போற்றியென் றடிவ ணங்கும் புசுண்டமா முனிவர் பாதம்
ஏற்றியே வணங்கி நந்தி இயல்புடன் நிகண்டு சொல்லக்
கூற்றினை யுதைத்த யீசன் குமரிமா மலைம டந்தை
சாற்றிய படியே யானும் தரணியோர்க் குரைத்திட் டேனே. (2)

உரைத்ததோர் வேத நான்கும் உயர்பதி னெண்பு ராணம்
நிரைத்ததோர் காந்த மொன்றும் நிலையுறும் யோக மொன்றும்
கரையிலா நந்தி வாக்யம் கணக்குமத் தாள மொன்றும்
தரையில்முந் நூற்றுக் குள்ளே சாற்றினே னறிந்து பாரே. (3)

பாரப்பா வேத வாக்யம் பண்புட னுரைத்தே னித்தை
தேரப்பா முற்றும் பார்த்துத் தெளிந்தொரு நிலையில் நிற்பாய்
ஆரப்பா யெனைப்போற் சொல்வார் அரனெனக் குரைத்த நூலை
காரப்பா உந்த னுக்காய்க் கருத்துடன் வெளியிட் டேனே. (4)

இட்டேனே யிந்நூலுங் கிரந்தவாக்காய்-இவையுமையு முரைத்தமொழி தவிர்த்திடாமல், விட்டேனே சண்டீசன் மனமுந்தேற-விளம்பினேன் வடமொழியின் விரிவைக்கண்டு, தொட்டேனே இந்நூலைச் சுருக்கமாகத் - தொல்லுலகோர்க் குண்மையிது தெரிய வேண்டி, நட்டேனே தமிழ்ப்பயிராய் விளையவைத்து - நன்மை பெற யிப்பொருளைக் கூறினேனே. (5)

கூரியதோர் மாயசத்தி உரைத்த நூலைக்-கொடுமுடியோன் கண்டறியாக் குறியீதப்பா, வாரியென்ற சமுத்திரத்தின் கரைகண்டாலும் - மாயசத்தி யுரைத்தசொல்லோ கரைதோணாது, சீரியதோரிந்நூலை வெளிவிட்டாக்கால் - சிவனுமையாள் சாபமெத்தத் தெரிந்துகொள்வாய், பாரிலிதை வீணருக்கு விள்ளவேண்டாம் - பாழ்நரகே யெய்துமிது பார்ப்பாய்நன்றே. (6)

நன்றென்ற நாமமது தொண்ணூற்றாறு - நடுவரையுங் கடைவரையு மெண்ணூறாகும், கன்றென்ற நாமமது யெண்பதாகும் - கடைமுதலும் நடுநிற்க அறுநூறாகும், வன்றென்ற நாமமது அறுபதாகும்-வலக்கடையுந் தலைநீக்கி நடுநூறாகும், சன்றென்ற நாமமது யேதுமில்லை-சதமாறுஞ் சேர்த்தடித்தால் தான்தானுமே. (7)

தானகு மூலமென்ற ஓங்காரத்துள்-சத்திநின்ற ஆங்கார பீடமேது, ஊனமே லிங்கத்தின் வழியாஞ்சத்தி-ஒடுக்கிலிங்கங் காணட்டாற் சத்தியெங்கே, மானமென் மகாரமந்தப் பீடமேறில் - மாசத்தி லிங்கத்துக் கொடுக்கமாகும், யானுமே அகாரமப்போ சத்திலிங்கம்-ஆச்சுதே அருவுருசண் டசாநீயே. (8)

நீயென்ற உகாரமது ஐம்பத்தொன்று - நிறையான சிகாரமது அறுபத்தைந்து, தீயென்ற வகாரமது நூற்றெட்டாகும்-திகழ்ந்ததொரு மகாரமது யிருபத்தைந்தாம், நீயென்ற அகாரமது யெழுபத்தைந்தும்-திகழ்ந்ததொரு நகாரமது நூற்றொன்றாகும், ஈயென்ற பொருள்மூந்நூற் றறுபதாகும் - இசைக்கூட்டும் பன்னீராயிரமுங்கூட்டே. (9)

கூட்டியே ரேசகத்தின் போக்குக்கைந்தாம்-குணமான பூரகத்துக் கைந்துயெட்டாம், பூட்டியே பூரணத்துக் கொன்றுபத்தாம்-புகழான கும்பகத்துக் கொருநூறாகும், ஆட்டிமூல சுவாதிக்கு முப்பதாகும்-அக்குமணி சதாசிவத்துக் கோரைந்தாகும், சாட்டியே சவங்கிரண [ஓங்கார] சத்திக்கென்ன - சதநிதமாம் ஆங்காரக் கணக்கொன்றீயே. (10)

கணக்கான பிரணவத்தின் வாக்குக்கோடி - கண்டுரைப்பேன் ஐயிரண்டும் ஒருநான்காகும், விணக்கான வியாக்கிரண மெட்டுப்பத்தாம் - வித்வேதன் முறையிட்டு உயிரேஐந்தாம், இணக்கான தொய்தமெனு மணிக்கீரைந்து - யெண்ணியதோ ரோரெட்டு விசைபொல்லாது, துணக்கான தொய்தத்தைத் தோணக்கண்டால்லிதாலைத்தேறும் ஆறென்ற குஷைங்நாமேண. (11)

காணவே பொருளாகுங் குருவின்வாக்கு-கடந்தாக்கால் தத்துவங்கள் தொண்ணூற்றாறும், கூணவே குடியோட்டுஞ் சங்கற்பசாலம்-குறையரையால் விள்ளுவதோர் நெறிசாணாதார், பூணுவது பொருண்மைவிட்டு அகணியாந்தல்-புரமுனக்குக் காணாது பொருளைச்சார்வாய், தோணுவது ஐம்புலனைத் தள்ளுதற்குத்-துள்ளிக் காய் கிள்ளியதைத் துலைத்துக்காரே. (12)

கார்ப்பதுவு முப்பத்தி ரெண்டிலொன்று-காரமது நீக்குவது நாற்பத்தேழு, பார்ப்பதுவு மீராறு லவ்வொன்றுமேலே-பதிவான நூலத்தின் வாறுகாணும், சேர்ப்பதுவு மைந்தோடே நான்குமாகும்-சேர்த்திட்டா லெட்டெட்டுஞ் சிக்காதென்றே, பூப்பதுவுங் காய்ப்பதுவும் நூலாங்கண்டாய்-பூதலத்திற் பிறப்பிறப்பு யில்லார் தானே. (13)

தானென்ற குருநாதன் சத்தியாலே-தானறிந்தார் மூலகுரு சூக்ஷங்காண, ஏனென்ற சதாசிவத்தாற் சத்திதானும்-இருந்தறிந்தாள் பூட்டினுட கருக்களெல்லாம், ஊனென்ற பலவுயிர்க்குஞ் சிவத்தின்கூரு-ஓங்கார பிரணவமே சத்திகூரு, மானென்ற பரப்பிர்ம மாயிரூபம்-மயக்குமப்பா மனக்கண்ணால் மாளுஞ்சித்தே.

சித்தென்றால் சித்தறிவ ரரிதுகண்டாய்-சிவமென்ற நாமமது மரிதுகண்டாய், பித்தென்றாற் பிரணவமு மரிதுகண்டாய்-பின்னு முன்னும் நீக்குவது மரிதுகண்டாய், வித்தென்றால் விளைவதுவு மரிதுகண்டாய்-விளைந்தேறித் தேறுவது மரிதுகண்டாய், நித்தென்ற நிசாகவச மரிதுகண்டாய்-நிராமயமாம் நிர்மலமு மரிதுதானே

அரிதான உருவமடா சத்திகாயம்-அதற்கடக்கம் புவியாகு மறிந்துகாணு, எரிதானே தழலோடும் கூர்மைகண்டால்-எவ்வாறு மிச்சடலம் எண்பதாகும், கரிபூக்குந் தழல்போலக் காணுமந்தக்-கணுவிலே கண்டசிறு பொருளுமாகும், நரிபதியாம் சத்தியிட்ட ஓசையப்பா-நாதாந்த மனோன்மணியால் நல்கலாமே. (16)

நல்குவரோ புருக்குழும்பின் சடலமானால்-நாடாது கனவேகம் நாமம்பாரு, வெல்குவரோ விழியாட்டம் நிமைக்காகாது-வேதனையுள் ளடக்கிட அபானமூட்டும், செல்குவரோ வேகமென்ற சிறுபெண்ணாத்தாள்-சிதறிநிற்கில் திரிந்திடுவாள் திரையைத் தானே, மல்குமென்ற பொருளுனக்கு வாய்க்குமானால்-மைந்தனே சுண்டுசர் மகாரந்தேறே. (17)

தேறுவது பெதுவென்று லென்னலாமோ - தென்றலர்ந்த கொன்றையனைத் திறமாய்க்காட்டும், ஏறுவது பூரணமே யேறினு னும்-இகபரமா மிகபரமா யேறிப்பார்த்தால், சேறுவது குண்டலி யின் பூசைகொண்டு-செறியான வழியோடே சிவத்தைநீக்கி, கூறு வது கருக்கடையின் போக்கைப்பாரு - குருகவரும் பொருளறிவாய் சத்தியாமே. (18)

சத்திமுத்தி பத்தியென்ற பொருளைக்காணு-சாதகமா யெவ் விடத்து மிருப்பைப்பூணு, நத்திநத்தி ஓத்திவருங் குறியைக்காணு நடனமிடு மதின்கூரை நாடிப்பாரு, சத்திமத்தி வெற்றியென்ற வீரம்பாரு-சகனமிகு அதினுமிடக் காட்டைக்கட்டு, பெத்திமெத் தி வித்தியென்ற மூலம்பாரு-பிரணவத்தின் வாறுகண்டு பிரித்துப் பூணே. (19)

பூணுகின்ற ஓங்காரம் ஸ்ரீங்காரமெங்கே-புகைந்தெழும்பும் மே கத்தின் பொருளையாய்ந்து, தாணுகின்ற வக்கல்கக்கச் சக்கமிக்க- சரியான மூன்மூன்றி லடக்கம்பாரு, தோணுகின்ற வாசனையின் ரசகெந்தமைந்தும் - தொடரான நவத்திலதுக் கொன்றும்பாரு, மாணுகின்ற பொருளறிய வழியிதென்று - மாறியெதி லிருப்ப மென மூன்றிற்பாரே. (20)

மூன்றான மூன்றுமது சகலத்துக்கும்-முதற்பீடம் வரையாகு ம் மூன்றின்கூறு, ஊன்றான உந்திக்கு ஓங்காரமாச்சு-உழலுகின்ற பாதவரை நீங்காரமாச்சு, கான்றான கபாலமட்டும் ஸ்ரீங்காரமாச்சு- ககனமென வூடுருவிக் கருவாங்கோடி, தோன்றான நகாரமிட்டுப் பனிரெண்டாயிரத்திலைந்துமாறி - தொடமெந்தக் குறிகரணத் தலங் குந்தானே. (21)

தானென்ற வம்முக்கோ ராயிரமுந்தள்ளு-தளராத நம்முக்கோ ராயிரமுந்தள்ளு, சானென்ற சம்முக்கோ ராயிரமுந்தள்ளு - சதி ரான உம்முக்கோ ராயிரமுந்தள்ளு; வேனென்ற யிம்முக்கோ ரா யிரமுந்தள்ளு-வேதையென்ற அம்முக்கோ ராயிரமுந்தள்ளு, பா னென்ற பம்முக்கோ ராயிரமுந்தள்ளு - பகருகின்ற லம்முக்கோ ரா யிரமுந்தள்ளே. (22)

தள்ளப்பா ஆயிரத்திற் பாதிகும்பங்-தயவான ரேசகத்துக் கப் படியேயாகும், பள்ளப்பா பூரகத்துக் காயிரத்திற்பாதி - பண்டை மணி ரேசகத்துக் கப்படியேயாகும், விள்ளப்பா வியாக்கிரனுக் காயிரத்திற்பாதி-வீறான தூரியனுக்கு மப்படியேயாகும், உள்ளப் பா ஒன்றுக்கு மூன்றேயாகும்-உயர்கிகரிற் கண்டசிறு தீபமாமே. ()

தீபமென்ற ஒன்றுக்கு ஒன்றும்பாரு - சிரணவமாம் பிரணவத்துக் காருஞ்சோதி, தீபமென்ற பஞ்சரத்துச் கஞ்சாந்தீபம் - தீபமென்ற நஞ்சனுக்கு நாலாந்தீபம், தீபமென்ற குமரிக்கு மூன்றுஞ்சோதி-திகண்டகட லாடிக்கி யிரண்டாந்தீபம், தீபமென்ற ருத்திரரும் ருத்திரரூபி-திருவுருவு மொன்றுக்கோ ரொன்றேசோதி. (24)

சோதிகண்ட யிடமதுவே வெளியதாகும் - சொரூபம்நின்ற யிடமதுவே சத்தியாகும், ஆதிநின்ற யிடமதுவே மூலமாகும் - அயனின்ற யிடமதுவே கமலமாகும், பாதிநின்ற யிடமதுவே கண்டமாகும்-பருகிநின்ற யிடமதுவே விழியதாகும், கேதிநின்ற யிடமதுவே செவியதாகும்-கிளர்த்துகின்ற பந்தனமே வாயதாமே. (25)

தாமென்ற வாயிக்கோர் நிலைதானுண்டோ - சத்திமத்தி புத்திபத்தி யெத்தியந்தம், வாமென்று மொழிவதுவே அதுவுமாச்சு - வாமாய சிவாயாவென் றதுவுமாச்சு, காமென்ற சுடர்மூன்று மதுவேயாச்சு-கயநயவய மென்றமூன் றதுவேயாச்சு, பாமென்ற பரம்பொருளிவ்வா றுவந்தால் பரம்பொருளாமதுவெனவாய்ப்பகரலாமே

பகர்ந்திடவே யொண்ணாது பொல்லாப்பூட்டு-பாசபந்த மெத்தவுண்டு பகரக்கேளு, தகர்ந்திடவே பூரணத்தி லுதையும்போது-தங்காது காமத்தின் கடற்பூட்டொன்று, உகர்ந்திடவே வேகமது அடங்காதந்த-உற்றசிந்தை கொண்டாடும் உகாரப்பூட்டு, சிகர்ந்திடவே வெளியாக்கும் பொய்மாயப்பூட்டு - சிக்காது வாய்க்கடங்காத் தீரப்பூட்டே. (27)

தீரமென்ற மகோதரனும் ஊமையப்பா - திரம்விள்ள வகைகாணான் சிக்கிக்கூண்டில், மீரமென்ற நால்வருக்கு மூழிக்காரன்-மிதமவர்க்குத் தென்பட்டு மிகாமியம்மூழ்கி, பீரமென்ற மவ்வெழுத்து நவ்வெழுத்திறசிக்கி - பிரளாமற் பிறக்குமது மீனசூக்ஷம், கீரமென்ற கிரணவகை யெதுதானாகும் - கிளம்புகின்ற கிரணமொழி பூசைகேளே. (28)

கேளப்பா சண்டீசா வுண்மையாகக் - கிளத்துகிறேன் கிரணவழி கொண்டுதேற, மீளப்பா வவ்வெழுது ரவ்வெழுத்துங்கண்டு-மீனமுச்சஞ் சுவாதியிடம் பறந்துநாடி, சூளப்பா அருவியுட தானம்பாரு-சுகுனசுக்ர கிரகமப்போ தொய்யிடமும்பாரு, நாளப்பா அவர்நின்ற குறியைக்கண்டு - நாற்றிசையில் நின்றமுகம் நோக்கிப்பூணே. (29)

பூணப்பைத் தூளிதமும் நீங்காரமெண்ணிப் - புத்தியுடனேம் பூதப் பொறியைக்காட்டி, காணப்பைக் காஞ்சிரவித் திட்டுக்கண்ணை கமலத்தி லூணியப்போ ககன மார்க்கம், ஊணப்பை ஓம்கிரண வாயா ஓம்கிராணவாயா-ஓம்பிராண யாவென்று நாற்றென்றேது, பேணப்பைக் கைவாரி சிவனைமுன்னி-பெரிதென்றே நம்சிம்வம் மெ ன்றுதூத்தே. (30)

தூத்திவிடக் கதிரோனும் விழிப்பான்கண்ணைத் - தூக்கமுனைக் கில்லையப்போ துலைந்துதென்று; பூத்தமலர்ப் பூவதுவு முனக்கே வாய்க்கும்-போக்காகப் பிறப்பிறப்பு மதிலைாகும், எத்தமென்ற குறியுனக்கு யியம்பக்கேளு-யெத்தொழிலு மித்தொழிலுக் கிணை யாகாது, சாத்திடுவே னுன்றனுக்கு மனக்கண்ணூணிச் -சதாசிவத் தின் பிரைகிரணஞ் சாற்றக்கேளே. (31)

கேளப்பா அந்திசந்தி மத்தியென்றங்-கிளம்புகின்ற திங்களெ ன்ற கிரணந்தன்னை, மீளேநீ சோதிமக முப்பூர மவிட்டஞ்சித்ரை துலங்குகின்ற விசாகத்தின் பீடங்கண்டு, ஆளேநீ சுக்கிரனு 'மகரங் கும்பம்-ஆனவிருச் சிகமேஷ ரிஷபம்பார்த்து, வேளேநீ புனலாடித் தம்பித்தந்த-விர்த்தியுள்ள சந்திரகிர ணத்தைப்பூணே. (32)

பூணுகின்ற யோகசந்திர கலையைநாடிப்-புணருகின்ற வாசிதனை மடக்கிஊது, காணுகின்ற நட்சேத்திர ராசிசேர்த்துக்-கடுமொன் பதனிலியக் கருதிநின்றால், ஊனுமந்த ராசிகொண்டு கிரகவேதை- ஊமாயாவாமாயா சந்திராயா வென்றிருபத்தொன்று, காணுமிப் படியேழு தரமேபாணி - கருதியதை விடத்துலங்கும் கிரணக் கண்ணே. (33)

கண்ணான மனக்கண்ணு கிரணமூணக்-கருதியந்தச் சந்திரகலை காட்டும்பூர்ணம், ஒண்ணான கலைக்குறியும் யோகவாசி-ஒடுங்கிநிற் கும் பலகுறியும் உனக்கேவாய்க்கும், பெண்ணான ரோகணியாம் கலைகுறைந்து-பிரித்திரவைப் பூரணச்சந் திரனும்நீக்கும், எண்ணான தீட்சைவிதி யிவ்வாறுகண்டாய் - இகபரத்துப் புனிதற்கோ யின் னங்கேளே. (34)

இன்னங்கேள் சண்டீசா நன்றாய்ச்சொல்வேன்-இமையமென்ற துருவத்தின் சூக்ஷங்கேளு, முன்னுமென்ன பின்னுமென்ன தள்ளி த்தள்ளி-முன்னீரெட்டு மோனமென நீக்கிநீக்கி, தன்னறிவாந் தன், னறிவில் நடத்தைகாட்டும்-தானதனைச் சாதகமாய்த் தரிக்கவேணும் சன்னதமாந் துரியமென்ற துரியக்காட்சி - சதாசிதமே பூணவொரு தவறிராதே. (35)

ஈசாதே பஞ்சகிர்த்ய யோகசாதம் - இனைமனை புனையென்ற நவத்துக்குள்ளோர், தூராதே ஐம்பூதந் தன்னிலொன்று - துலை கின்ற சேத்துமத்துக் குதவிதூர்வம், ஏராதே யோகவரை மட்டுங்கட்டும் - ஈனசுர வாகனப்பெண் ணுத்தாள்வாழ்வு, கோராதே கமலாக்கினி யோகம்பண்ணு- கூடுமந்தத் துருவத்தின் குணத்தைப் பாரே. (36)

பார்துருவ பீடத்தின் தானஞ்சொன்னேன் - பணிவதற்கோர் மூலமது பாருபாரு, காருமொரு சிராவணத்தின் திங்களொன்றிற்- கனபூர்வ பட்சத்தில் நவமிநாளில், ஏருமந்தக் கதிர்நாளும் மகமும்பாரு-இறப்பிறப் பற்றசெடி நீழல்கொண்டு, சாருமந்த யிடந்தனிலே யேமகூடம்-தன்முகமாய்த் தானிருத்தித் தம்பித்தேரே. ()

தேரேநீ புவனயா போகனயா- துரவாயா வெனறேது ஐந்நூற்றேழு, சேரேநீ செபித்திடவே துருவநாதன்-சிகர்கிரண வெள்ளிகிரியுச்சிகாட்டும், பாரேநீ விழிமலர்த்து ரம்யம்வம்மென்றே-பற்றிமந்திரத்தையைந்து ஓதிநிற்க, மாரேநீ செடியதுவும் பலித்துப்போச்சு-பரமனரு ளுனக்காச்சு பத்துப்போமே. (38)

போமந்த மூலியுட பொருளின்சூட்சம் - புகட்டுகிறே னகாரமது தனிலேகாணு, ஏமந்தப் பிறப்பற்ற மூலியாலே-யெப்பொருளு மெய்ப்பொருளா யிருக்குங்கண்டாய், போமந்தத் துறவதுய்ய கடாட்சமீறிற்-போதமந்த அஷ்டாங்க யோகந்தானும், தாமந்த சத்திசதா சிவமுருத்திர - தமுற்கண்ணே விண்ணுமண்ணும் பொன்னதாமே. (39)

பொன்னன வேதமுடன் கீதம்வாய்க்கும்-புராணமுடன் பிராணகிதம் பொருந்திவாழும், ஒன்னன முதற்கேள்வி வாசமேசம் - ஊர்வனமு முரைசாதிக் கூர்மையாகும், தன்னன நீர்களில்வாழ் பெருமைவேறு-சாய்கதிரின் கிராணம்போற் சாயவேணும், என்னளு மிப்படியே வாய்த்தோர்க்காகும் - இயம்புகின்ற பொருள் சூக்ஷம் யீசனமே. (40)

ஈசனும் அஷ்டதிசை அஷ்டாங்கயோகம் - இணங்குதற்கு யானுரைப்பேன் சண்டீசாகேள், வாசனு மிந்திரன்தீ யெமன்நிருதி - வருணன்வாயு குபேரனீ சான்யனகும், தாசனு மிவரெட்டும் பதவியான-சாந்தகுண மவைகளுக்கோ சத்தியெட்டு, காசனு மஷ்டகோண ரிஷியென்பேரன்-காலனல் மாளாது காணுகாணே. (41)

காணுதற்கு யானுரைக்குங் கருத்தைக் காணு - காலனுனக் கிடாமோ கமலனுவாய், தாணுதற்குச் சத்திமதம் சமயமதமாகும்- சாஸ்திரமதம் தான்பமதம் தன்மமதமாகும், காணுதற்கு மெய்ப் பொருளும் உணர்வாய்க்கொண்டு-நால்மூல முறைத்திடுவேன் நன் றுய்ப்பாரு, பூனுவா யீசாயம்வாமாயம் தேவாயபபூதாயம்-பூர்ண யம் தம்யாயம் சிம்மாயம் கோறுயமாமே. (42)

ஆமெனவே தூர்வாயம் தூர்வவாயம் சேர்மாயம்சுக்கி - லாயம் பிரணுயம்பிராணர்த்தாய மென்றும், நாமெனவே நாமாயா நமச் சிவாயா காளகண்ட கன்னிகாயா-ரவியாயா சோமாயா ஓம்திரிசங் கற்பசிவசிவவென்றோது, ஆமெனவே யிருபத்தோ ருருவையோதி- ஆதியந்தக் கூடதனில் அரிசிவமசிபோயிம் மூலமோதி, ஓமெனவே ஓம்நமாவென் றோதிப் பார்த்தால் - உதையமப்போ அஷ்ட சித்தி புலக்குத்தானே. (43)

தானப்பா மூலமந்திர மேழுக்கும்நாதம் - தப்பாமல் ஓசையது கபாலங்கிட்டும், வானப்பா செவியிரண்டுங் கரமடைத்து - வாக் கோசை நரம்படா வாரிவிள்ளும், கானப்பா உந்தனுக்கா யெடுத்து விட்டேன் -நாயகியாள் கமலமது நம்பிப்பூணு, பானப்பா பருதி யுனக் காளாய்ச்சத்த-பாஷ்களமு நீயேறிப் பரமனுமே. (44)

காமென்ற நாமத்தை நருக்கித்தள்ளி-நலமான மூலாக்கினி தா பாக்கினிதள்ளு, தாமென்ற யீசானந் தற்புருடம் அகோரம்வாமம்- சத்தியோ சாதமுக மைந்துந்தள்ளு, வேமென்ற வாக்குபஸ்தம் பாதம்பாயுரு - மிகுபாணி யிந்திரிய மைந்துந்தள்ளு, பாமென்ற கொலைகளவு பொய்காமங்கள்ளு-பகரும்பா தகமைந்துஞ் செறிந்து தள்ளே. (45)

செறிவதென்ன யிக்குறிகள் விண்டோனுசான்-சிவசிவா சொல் லிவிட்டேன் தொண்டன்நந்தி, முறிவதென்ன அவள்பதத்துக் கடுமையாகி-மூலாதி மூலம்விண்டே னுந்தனுக்காய், செறிவதென் ன மூர்சாபம் கண்டிருந்தும் - செறிந்துவிட்டேன் மனக்குறிப்பு அறிவுப்பூட்டை, பொறியடக்குஞ் சண்டீசா மனக்கண்ணோடு - பூதமைந்து மடங்கவிதை யடக்குவாயே. (46)

அடங்குவது உன்பெருமை யாத்தாள்பாதம் - அகத்திலுணர் உடையவனே ஆசானுசான், தடங்குவது சத்தபரிசரூப ரசகெந்த மைந்தும்-தப்பாது வெளிவிட்டால் தாக்குஞ்சாபம், துடங்குவது புசுண்டமுனி வாக்குப்போல - துடர்கபால கிரியீசர் சொன்னார் முன்னே, படங்குவது பொல்லாத ரகஸ்யவேதம்-பாரிலிதை விள் ளாதே பதனம்பண்ணே. (47)

பண்ணுவது யோகசித்தர் கடமையாகும்-பரிலிப்பார் நாதாக்
கள் தகமையாகும், எண்ணுவது யோகவகை சிஷர்க்காகும்-இருப்
பிடமே காட்டுவது தவத்துக்காகும், கண்ணுவது குறிகண்ணே
மனக்கண்ணாகும் - காஷாயம் பூணுவது ஊணுக்காகும், ஒன்ணு
ஒண்ணுக் காகஒண்ணு வொவ்வோருண்ணு - யுகமுடிவு திறப்ப
தொன்று மூலியொண்ணே. (48)

ஒண்ணான மூலியதின் பெருமைமெத்த-உலகமென்ற யேமூல
க முண்டாமூலி, பெண்ணான ஆண்பெண்ணாய் விளங்கும்மூலி -
பெருமைபெற்ற முப்பூவு முண்டாமூலி, வண்ணானு மாவதுவே
பஞ்சமூலி-வானவர்கோ னிமையவர்க்கும் வாய்த்தமூலி, கண்ணு
ண நீலகண்ட ருண்டநஞ்சு-காய்பழமாம் பழங்காயாம் கந்தமாமே.

கந்தமென்றாற் கந்தமதுக் காகும்நாமம்-ககரமதிற் பதிமூன்றும்
மூலியென்றும், தந்தமென்றாற் கந்தத்துக் காதிகொண்டு - தவறு
மல் முதற்கிழங்கு முண்டாமூலி, இந்தமென்ற லகரமதிற் பத்து
மூன்றுந்தள்ளி-யிதமான யெழுக்குநால் மூன்றுமூலி, பந்தமென்ற
வரலாறு பகர்ந்தமூலி-பஞ்சாங்க பாஷாண மூலிதானே. (50)

மூலிமுதற் கிழங்குமப்பா வரிவேர்தானும்-மூடிந்தணலி வாழ்
வதுவும் முடிந்துபோச்சு, மூலிமுதற் கிழங்குதசை தோலெலும்பு-
முதிர்ந்தநிணம் பத்துமப்பா முடிவுகாணார், மூலிமுதல் வளர்ந்த
மங்கை செங்கையோடே - முடிதரித்தாள் மாலயனு முலகத்தோ
ரும், மூலிமுதற் கிழங்குமதத் தந்தம்வாழும் - மூதண்ட கோடி
யெனத் தரித்தநூலே. (51)

நூலென்றால் நுவலவல்லோ நூலின்பிண்டம் - நுகர்ந்தவனே
கண்டறிவான் நூலின்பிண்டம், பாலென்றாற் பாலுமல்ல நூலே
பாலு-பகுத்தறிவாற் காணுவது பரமநூற்பால், தோலென்றால்
தோலுமல்ல தோலின்கூறு-தோல்நூலு மொன்றாகும் தொந்தம்பா
லு, காவென்றால் காலுமல்ல தோல்பால்நூலும்-கலந்திருக்குந் தந்
தமப்பா காணுகாணே. (52)

காணவே வேணுமென்றால் யோகம்வேணும் - கருவுதித்துப்
பிறந்திருக்கும் தூலசூக்ஷம், பூணவே வேணுமந்தத் தியான
சூக்ஷம் - பொருளறமுங் கண்டேறித் தள்ளவேணும், ஊணவே
வேணுமந்த சிகாரத்துச்சி - ஊமையெனு முருப்பிடத்தை உருத்தி
வேணும், நாணவே காணுமந்தச் சுவாசசூக்ஷம்-நாடாத நால்வரை
யும் நாடியுண்ணே. (53)

உண்ணுமுண்ணு மெண்ணமெல்லாம் பொய்யாம் பொய்யாம்-ஊணுறக்க மானதெல்லாம் பொய்யாம்பொய்யாம், கண்ணுமென்ன விண்ணுலக வாழ்க்கை பொய்யாம் - கசடர்கட்கு ஞானமது பொய்யாம் பொய்யாம், பெண்ணுமன மாயைக்குப் பொய்யாம் பொய்யாம் - பேய்ப்பருத்தி யாடையணி பொய்யாம் பொய்யாம், எண்ணுமனக் குறிகாண்பான் பொய்யாம் பொய்யாம்-ஏழுலக மாடும்பொய்ப் பாண்டமாமே. (54)

பாண்டமென்ன பண்டிதர்செய் மாயபந்தம்-பரமான பொருளறியப் பயனேக்கேளு, அண்டமென்ன அண்டமென்று உரைப்பார்கோடி - அய்யய்யோ அண்டமெங்கே யறியார்பாவி, பிண்டமென்று முதற்பிண்ட மென்பார்கோடி-பேய்க்கூத்துப் பிண்டமென்ற பேருங்காணர், கண்டமென்ன கபாலமது வென்பாரையோ-கருத்தொழிற்குக் காமப்பால் காணுந்தானே. (55)

காணுவது பூரமென்றாற் பூரமல்ல-கட்டான லிங்கமது லிங்கமல்ல, பூணுவது வீரமென்றால் வீரமல்ல-பொல்லாத பாஷாணம் வெள்ளையல்ல, நாணுவது சாதிலிங்கம் லிங்கமல்ல-நாதாந்த நாதமது நாதமல்ல, கோணுவது கொச்சியிட்ட வீரமல்ல- குறைந்த கொம்புப் பாஷாண மல்லத்தானே. (56)

தானென்ற மூப்பூவும் உப்புமல்ல-சார்ந்தகரு வுப்பதுவும் உப்புமல்ல, ஊனென்ற உடற்கருவும் உப்புமல்ல-ஊட்டுமுறை செய்வதும் உப்புமல்ல, மானென்ற மண்ணுப்பு உப்புமல்ல-மாதவிடாயானதுவும் உப்புமல்ல, சானென்ற சவுட்டுப்பு உப்புமல்ல - சாதகமா யிவையுப்பு அல்லத்தானே. (57)

உப்பு அறியவும்.

உப்பென்று சொல்லுவதும் பொய்யாதய்யோ - உடலெடுத்த மரியுப்புக் காணுர்காணுர், சப்பென்றும் உப்பென்றும் உருசி காண்போர் - தானறியா மூடருக்குத் தருமோ உப்பு, அப்பென்றுங் கைப்பென்றும் அறியாருப்பை-அறிவுதரும் உப்புண்டு மயக்கமானல், உப்புப்புக் காணுது காணுர்மாயம் - உ-அ-ச உப்பிருக்கு மூலகந்தானே. (58)

உலகமதி லறைந்தவுப்பு மாயம்மாயம் - உதையபிண்டம் ஒன்ருன வுப்புக்காயம், சலமதிலே விளைவுப்பு சகஸ்திரமாகும் - சண்டாளச் சடலமது தப்பித்தேகும், பலகல்குறி யகலாமல் வாய்க்கும்வாய்க்கும்-பாலவுப்பு பாலவுப்பு வாதையானேர், கலகலெனு மமுதுண்ணும் உப்பாமந்தக் - கையடக்கி யெரிந்ததனைக் காணுர்பாரே. (59)

விபாம்.

பாரென்றால் தோணாது தோணப் பின்பு-பகருகிறேன் பரிவான
பாசமத்து, காரென்றேன் நாளுக்கு நாளாமந்தக்-கமலமுறை வா
ணியைநீ கசக்கியுண்டால், வீரென்றே கதரியவ ளளிப்பாள்நாதம்-
விடமிருக்கு மிடமப்போ விள்ளுமவிள்ளும், ஊரென்றால் உனக்
கந்த உப்பூராகும்-உரைத்தபடி சதநவய உரைந்துபோமே. (60)

போமென்ற யெத்தொழிலுஞ் செய்யப்பொய்யே-பொன்மய
மாய்ச் செய்வதையோ பொய்யாம் பொய்யாம், ஆமென்ற அறு
பத்து நாலும்பொய்யாம்-அதுவாகு மிடமறியா வரசன்பொய்யாம்,
தாமென்றே ஓதிவைக்கும் குருவும்பொய்யாம்-தருவான மூலிசொல்
வானவனும்பொய்யாம், ஓமென்ற மூவெழுத்தின் மூலிகாணார்-
ஓகோகோ உலகமப்பா உதிர்ந்துபோச்சே. (61)

போச்சுதப்பா சண்டீச முனியேகேளாய்-புகழ்மூலிலை மணவா
ளன் போதத்தாலே, காச்சுதப்பா நாளேறிக் காமம்பூண்டால்-
கடற்றாரும்பாய் மண்டூக மானதையா, ஏச்சுதப்பா யிச்சாசத்தி
கிரியாசத்தி ஞானசத்தி-யிதுமூன்றும் வாயாம லிகழ்ச்சியாச்சு,
வாச்சுதப்பா கலியுகத்திற் கபாலருத்ரி-வானவர்கோன் விண்ணோர்க்
கும் வழங்கந்தானே. (62)

வழங்கவென்ற மூலியதை வளப்பதாக-வைத்திட்டார் மயக்க
மதாய் வானோர்காணப், பழங்கனிகாய் பச்சிலையும் பவழப்பிண்
டம்-பனிவெடிப்புத் தந்தமுடன் பகர்ந்தமூலம், தழதழப்பாய்ப்
பரிமளிக்கும் மலர்தோற்கப்பித்-தானணிந்தார் பிரமனயன் முதலா
னோர்கள், அழலழலா யண்டமது மறைத்துவைத்தார்-அய்யை
யோ அண்டகரு வுதிரமாச்சே. (63)

விபரம்.

உதிரமென்ற அண்டமது அதுவேயாகும்-உயர்ந்தபஞ்ச யிந்
திரிய மதுவேயாகும், முதிர்ந்ததந்தி முன்னுரைத்த தறபதாகும்-
மூதண்ட அண்டமென்றே நாமமாகும், கதிர்மதியோன் காணாத
அண்டமூலி-காலனுக்கு உகந்தகரு நிணத்தின்மூலி, எதிர்சடை
யான் மானுக்கா யெடுத்தமூலி-யெம்பெருமான் தயக்கமிட்ட யே
மந்தானே. (64)

ஏமந்தான் அண்டத்தி லிருக்கும்வேதை-யெத்தொழிலும் மா
ரணத்துக் கேதுவப்பா, நாமந்தான் சீராமன் அமூதருந்தி-நடு
வோடை நகர்ந்ததொரு ரேகைமூலி, ஓமந்தச் சிவனணிந்த மாய
மூலி-உயர்நாரி கெற்பமென்று உரையுமூலி, சாமந்த மூலிக்குப்
பிறப்போ அண்டம்-தப்பாது உயிரதுக்குத் தாம்தானாமே. (65)

நாமதின்கூர் உரைத்திடுவேன் மயேசனப்பா - நத்திருப்பான் யேமனென்னை நவிலக்கேளு, சாமதின்கூர் விண்டுதெரிந் தறிந்த தாலே-சண்டாளா யிக்கருவுக் கிட்டசாபம், போமதின்கூர் தெரிந் ததினாற் சண்டிசநாதா - புகட்டுகிறேன் மாயத்தைப் பூட்டுநீக்கி, நாமென்ற நாமத்தை மாத்துப்பண்ணு -கம்மதென்று யிக்காயம் நாடிக்கேளே. (66)

கேளேமுன் சதுர்த்திவரை தவணை தாண்டில்-கிளர்சமய பாஞ் சசன்ய சித்தனை, வேளேசெய் மாணிக்க வாதவூரான்-விஷமுண் ட கண்டனடி விளங்கும்வெள்ளி, கோளகிரி வாசமிட்டு வாழும் நாளில்-கொடுமைசெய்யு மீரைந்து சிரத்தோனுக்காய், மீளவுமை யானயன்மால் விளம்புமூலம் - வினவியவன் விண்டதினால் விடுபட் டானே. (67)

பட்டானே சத்தியுமை சாபத்தாலே-பாருலகில் மானிடராய்ப் பிறந்துகாலம், விட்டானே பூங்கொடிக்காய் உமையிரங்கி-விடுவித் தாள் சாபமப்போ வித்தாம்சாஸ்திரம், கட்டாகக் கட்டியதைக் குருக்கிமுன்நிற்-காணுதற்குப் பொருளறியப் பகர்ந்தநூலு, தட் டாதே கெட்டியப்பா தரிக்கும்நூலு-சாஸ்திரவான் தரிக்கும்நூல் சாபந்தானே. (68)

சாபமதைக் கண்டிருந்தும் விண்டேனாகில்-சற்குணம துள்ள சண்டிசாகேளு, பாபமது மாலயனுங் காணுநூலு - பரமனணி முப்புரிநூல் பாரிலுண்டு, சாபமென்ற சாமனையாள் அரனுக்காகத்-தான்மறைத்து வைத்தசங் கற்பநூலு, தாபமதைக் கண்டுனக்கு உரைப்பேன்வேதம்-தரணிதனில் விண்டால்நீ சாவதாமே. (69)

தாமேதாம் தானவனுந் தனக்குத்தானும் - தந்தைதமக் கருக் குருவாம் தமக்குத்தாமாம், வேமேதான் கருத்தானும் ஒளித்து வாசி-வேகமென்ற பூட்டதனைப் பூட்டித்தந்த, சாமேதாம் மனப் பூட்டுத் திறந்துசார்ந்து-சதாகாலம் யோககும்ப பூரணத்திலூணி, நாமேதான் சிவந்தமுதற் கிழங்குபூசை-நாட்டிநின்று லுனக்காகும் நவில்வேன் தானே. (70)

தானென்ற தம்பத்துக் காறுவேணும்-தவமதற்கு நவம்வேணு ம் தானடைத்து, ஊனென்ற சடத்துக்கு உருப்புவேணும் - ஒன் றிரண்டாம் பத்தேழும் பணிரெண்டுவேணும், காவென்ற அண்ட பிண்டக் கருக்காணவேணும் - கபாலமப்போ திறக்குமந்தக் குரும் பைவேணும், வேனென்ற தந்தம்நூல் தோலும்வேணும்-விளங்கு மப்பா யிதுவிருந்தால் வேதையாமே. (71)

ஆமேதா னண்டத்தாற் கோடியாகும்-அதின்பெருமை மெத்த வுண்டு அறியவேணும், சாமேதான் முதற்கிழங்கு தன்னிற்கோடி சாகுமப்பா யெட்டெட்டும் சமர்த்தாம்வேதை, காமேதான் கர்மத்தா லாடுதற்குக்-காடிந்த நூலாகும் கனிசாயாகும், ஆமேதான் அதின்பத்திரி தோஷமுப்பாம்-அப்பனே பண்டிதனுக் காகிதானே.

ஆதியென்ற மூலமிது உனக்குரைத்தேன் - அப்பனே அதிற் சேர்க்கை அறிவிப்பேன்யான், சாதியென்ற சரக்குமறு பத்திரா லுந்-தப்பாது மணியாகும் சாம்பலாகும், சோதியென்ற சிவகாமி பாய்ந்தரத்தம்-சொலிக்குமது மாரணத்துச் சொரூபமாகும், நாதியென்ற நாதாந்தம் நமனுக்காகும்-நலிந்தகனி யுப்பதுக்குச் சோதிதானே. (73)

தானென்ற பஞ்சகரு வுப்புமாகும்-தன்வயத்தின் தீபனத்தைத் தள்ளிவைக்கும், வேனென்ற புயல்வெடிப்பு கர்மயிந்திரியமாகும்-வெப்படங்கும் விந்தம்வீ ரியமதாகும், மானென்ற விஷகுளிகை வேகமாகும் - மயானமென்ற பூமியதை மாற்றிவைக்கும், ஊனென்ற உடலுக்கு உறுதியாகும் - உத்தமந்தம் குழந்தைதனக் கொத்ததாமே. (74)

தாமென்ற நூலதனிற் சயின்யகர்மம் - சாதித்தா னப்பரப்பா சதாசிவமாமூலி, மானென்ற திரிபுரத்தை யெரித்தயீசன் - மாளாமல் முடிமீது தரித்தான்பாரில், காமனவன் வில்லுக்கோ ராதிமூலி-கடுந்தபுஷ்ப மாட்டிவிக்குங் கர்த்தாமூலி, நாமந்த மூலிவிள்ள வுன்னைத்தேற்றி-நயந்தகுறி குணங்கண்டு நவில்வேன்காணே. ()

காணந்த மூலியினு லனேகசித்தர்-கைகண்டார் கன்னியப்பா கடூரமெத்த, வேணந்தச் சதுரகிரி யுற்றபேர்கள்-விதமறிந்து ஆடினதோர் மூலிதன்னை, கோணந்தக் கும்பமுனி யுரைத்தார்வந்திரி-கூறினர் சாபமப்போ கும்பநாதன், சாணந்த மூலியினு லவர்தானிட்ட-சாபமப்பா மயக்கமது சாம்பமூலி. (76)

சாம்பலந்த மூலிவர்னம் பஞ்சவர்னம் - சாற்றக்கேள் வாலையிலே தாஞ்செழிக்கும், பாம்பலந்தக் கருத்தரிக்கும் காலம்பார்த்தால்-பஞ்சகர்த்தா ளுருவாகும் பளிங்கிச்சோதி, காம்பலந்த யிரவினிலே சுடராகும்-கனத்தபிண்டங் காலத்தில் தரிக்கும்பச்சை, ஓம்பலந்தச் சிவசத்தி ஆத்தாளப்போ-உற்பனமா யுதித்தபச்சைப் பூரம்பாரே. (77)

பார்ப்பதற்கு யிக்கணனு காணுதப்பா - பஞ்சேந்திரிய சடந் தோணப் பார்ப்பான்கண்ணில், சேர்ப்பதற்கு முதற்கிழங்கு சார்ந்துதானல்-சிவசிவா துலங்குமப்போ காணலாகும், பூப்பதப்போ பரிமளமாம் சிறுபெண்ணுத்தாள் - புரிநடன முனக்காகும் பூசை வேணும், காப்பவனே கண்டறிவான் சிவானந்தமூலி-கயிலையிலும் காணுகின்ற கர்த்தன்தானே. (78)

கத்தனென்று லாகுமப்பா லோகச்சித்து - கற்பூரம் பச்சையினற் காணலாகும், அத்தனென்று னுனக்காகும் பெண்கள்கோடி-ஆட்டிவைக்கும் இரவுபகல் ஆத்தாளப்போ, உத்தனென்று னுன்னருகில் நடனமாவாள் - உனைக்கண்டோ ரிறைஞ்சிடுவா ருலகமெல்லாம், வித்தனமாய்க் காண்பாய்வின் னுலகோரைத்தான்-வியசுய சியமுனக்கு வேணதாமே. (79)

வேணதென்ன நீவிலக்கிப் பூணக்கேளு - வியர்ந்தவனே சண்டிசா விபரமாகத், தோணவே அத்தவர்க்குச் சரீரமூன்றும்-துலைந் தகர்ன கபோலகரடமத மூன்றுந்தள்ளு, பூணதென்ன நிகழ்காலம் மூன்றுங்கள்ளு-புணர்ப்பதற்கு திருஷ்டிதிதி மூன்றுங்காணும், ஏணயிய லிசைநாடகத் தமிழ் மூன்றுந்தேரு-யிதமென்ற முக்குணமு மிருக்குந்தானே. (80)

இருக்கவல்லோ வேணுமின்னஞ் சொல்லக்கேளாய் - இச்சகிரி ஞானசத்தி மூன்றும்வேணும், குருக்கதனு கரணபோக போக்யம் வேணும்-கருமனம் புத்தியொன்றில் தள்ளவேணும், நருக்கவல்லோ நாணமட மச்சம்வேணும்-நற்சரா யுசம்யோனி நாலேத்தள்ளு, ஒருக்கவல்லோ ஆகாரநித்ரை நாலுந்தள்ளு - ஓகோகோ யிக்குணங்கள் உடைந்தாற்பாரே. (81)

பாருனக்கு உரைப்பதற்குப் புத்திகேளு-பரமகுண முடையவனே பாலிப்பார்காண், மேருனக்குச் சிரமீதி லிட்டவாறுய் - மிதசயநயபய வயமென்றே நிற்கவேணும், தூருனக்குப் பயன்பூருமைந்தைக்கட்டி-தூத்திடு கபாலமண்ட கோளத்துள்ளே, வாயமென்ற சுவாசபந் தனமே செய்து, வாய்பிசகா திருந்தாக்கால் வாய்க்குமென்றே. (82)

என்றேனே யிப்பொருளி னியற்கையெல்லாம் - இயம்பினேனிம்மொழியில் விளங்கச் சூக்ஷ்மம், கன்றென்ற மனக் கண்ணின் பொருளை யெல்லாம் - காட்டுகிறேன் முந்நூலிற் கண்டுகொள்ளு, ஒன்றென்ற பயனறியா விள்ளாதப்பா-உரைத்ததொரு ஐம்பதிலே யுதிர்ந்துபோகும், நன்றென்ற யிப்பொருளைத் தேர்ந்தாயானல்-நாயகனு மெந்தனக்கு நந்திவாழ்வே, (83)

வேறு.

வழங்கும் உலகம் வாய்ந்த பொருளினுஞ்
தளங்கும் குருவடி தவிர்ச்சுடு வெடிப்பினுல்
விளங்குந் தவிழ்ந்திடும் மிகநா கெய்துவார்
இளங்கும் பரமா யிசையிசை சிக்கதே. (84)

சிக்குவார் பூட்டுத் திரிமுகங் காண
இக்குரு வறிய இதம்படு வாராய்
சுக்கதின் குணமே சுகமது காணச்
சக்குரு னாதவிந் ததுகண்ட வாறே. (85)

கண்டரே துருசு கட்டின சுருக்கை
விண்டரே யதனில் வெகுகோடி செம்பொன்
கொண்டரே வெள்ளை கொண்டாட்ட மென்பர்
பண்டரே லிங்கம் பார்த்தறி யெண்பதே. (86)

எண்பதே செம்பயம் யினம்வெகு கோடி
முண்பதே கண்டு முழுத்தனங் கண்டனே
பண்பதே நல்ல பயன்படு காவி
நண்பதே யியம்பும் நற்குறி யாமே. (87)

குறியென்ற வுப்பு கொடிபகர் மூலி
வரிவரி பிண்டம் வாகான சாலம்
சரியிடு மையஞ் சனதாது மாகும்
பொறிபுல னெடுக்கம் புகழ்ந்தவ ராமே. (88)

ஆமெனச் சூதம் ஆடுதென் கையில்
ஓமென வேகம் ஓடுது மென்பார்
பூமகள் வாணி பூத்தவ ளென்னிடம்
நாமென்ற யோகம் நாடுமஞ் சனமே. (89)

மஞ்சன அஞ்சன மாயப்பச் சிக்குறி
கொஞ்சன வேதை கொடுமலை பொன்னும்
எஞ்சனப் பெண்கள் யிடுகுலை மாயம்
வஞ்சனை யேறி வாயடைப் பாமே. (90)

ஆமே அரனு ரறைந்ததோர் நூலைத்
தாமே யெழுவர் தன்னூற் றேர்ந்தே

போமே சமாதிப் பொறிகளை விண்டேன்
நாமே நாமாய் நவின்றேனும் வாரே. (91)

ஓதுவ தரிது ஒருவர்க் காகுமோ
சாதுவ தறிந்து சரியது மெய்யென
வாதுகள் பேசி வரும்பொருள் பறிக்கும்
ஓது பொருளறியார் உயர்காணத் துறவே. (92)

உரவென்ன நேசம் உயர்ந்தசண் டாளம்
மரவென்ன தூரம் மாற்றுவார் பெரிது
சரமென்ன சாத்திரம் தானீவ தல்ல
கரகர வென்பதே காணலாஞ் சோதியே. (93)

சோதி விலகுந் துற்சன குணத்தில்
நீதி விளங்குதல் நின்னயப் பொருள்காண்
வாதியென் றவனே வாயது பதரி
சாதிபண் டிதனே டரியாப் பகையதே. (94)

பகையா மிதுவெலாம் பகர்ந்தனன் யானும்
தகையென் றவரொடு சார்வது நன்றல
மகிமையாங் குணத்தின் வாறுசிக் காமல்
உகமை யுனக்குள் ளுரைப்பதைக் கேளே. (95)

வேறு.

உரைத்ததெல்லாம் மானிடர்செய் தொழிலீதப்பா-ஒருபொருளு மறியாத மூடராகும், நிரைத்தபொரு ளறியாத சண்டிக்காமோ-நிறைந்தமலர் பூரணத்தின் நிலைகாண்பாரோ, கரைத்ததென்ன உரைத்ததென்ன உரைத்தாலென்ன-காணார்கள் காணார்கள் கமலந்தன்னை, அரைத்ததொரு சூக்ஷத்தை யறியாரோடே - ஆடாதார்க் கீய்ந்தபொரு ளாகுந்தானே. (96)

தானேதான் தானவனுய் நந்தியானும்-சாற்றுகிறே னந்தமொழி மூலிசூக்ஷம், வானேதான் மனதடக்கிக் கொண்டுசார்ந்து - வணக்கமுடன் நீயறிந்து மாற்றிப்போடு, மானேந்துங் கரமிடத்தான் தாங்குஞ்சத்தி-மனோன்மணியை மனதுகந்து மகிழ்ந்துபோற்று, நானேந்துஞ் சகதண்டம் நீயேபெற்று-நடனதிரு வுருக்கலந்து நாடலாமே. (97)

### உப்புதீட்சை.

நாடவே வேணுமென்றாற் சொல்லக்கேளு - நன்கறிவால் லவணஞ்சேர் கொண்டுவந்து, கூடவேயாழிநீர் படிதான்விட்டுக்-குமுறவே கரைத்துரவி நவநாள்வைத்து, மாடவே கந்தமென்ற கிழங்குதன்னை மாற்றுவா யதனுறவி மடித்துப்பின்பு, நீடவே மிணமெலும்பு நரம்புதோலும்-நீசதைத்து லவணத்தின் கூடமாட்டே. (98)

### உப்பு.

மாட்டியே யெரிப்பாய்நீ நிணங்கலக்கி - மடியுமப்போ லவணமது கட்டும்பாரு, கூட்டியே பதைக்கலக்கிப் பாரிலிட்டால்-குமரிக்கட்டும் பொடியுப்புக் கூரைப்பாரு, நாட்டியே யதையெடுத்துப் பதனம்பண்ணு-நாயகியாள் ரவிசிலை கவசங்கட்டி, மூட்டியே சிமிழடைத்து வைத்தாயானால்-மூவுலகும் நீபெறுவாய் மொழிந்தேன் பாரே. (99)

### சாக்துகள்கட்ட.

பாரப்பா பலதொழிலும் பார்க்கவென்றாற் - பணவிடைகால் லவண்கட்டு பகர்மூலித்தோல், நேரப்பா கவசமிட்டு பொக்கினுள்ளே-நீவைத்துத் தணலிடவே நீறிப்போகும், நீரப்பா பூநீரு நாமமிட்டு-நிச்சயமாய் ஆடப்பா நினைத்ததெல்லாம், சாரப்பா பலபலவுங் கட்டும்கட்டும்-சதமென்று நம்பவிது முப்பூவாமே. (100)

### மூப்பூ விபாம்.

முப்பூவின் வாறுனக்கு உரைக்கக்கேளு-முதற்பிண்டத் திடப்பிண்ட மூலங்கேளு, இப்பூவின் யிடப்பிண்ட மண்டம்போக்கி-யியலான தலைபோக்கிக் கண்டந்தானும், செப்பூவின் தசைநரம்பு தோல்மூன்றுங்கூடிச்-சிறந்ததினால் முப்பூவும் உப்புக்காச்சு, இப்பூமி பூவினுப்பு உப்புக்காமோ - யியல்பிண்ட வுப்பதனால் முப்பூவாச்சே. (101)

வாச்சுதென்று மகிழாதே மனம்பொல்லாது - வாயாது வாயாது வசனித்தாக்காற், போச்சுதென்று மவுனமுற்று லுறையுஞ்சூதம்-பொருளாகும் மாத்துமிடப் பொன்னும்மண்ணும், காச்சுதென்று மகிழாதே கல்லதானால்-கண்துலங்கும் பாத்துக்குங் கனியதாகும், ஏச்சுதென்று புகலுவா யாவரோடும் - இணங்கினவர்க்குரைத்திட்டா லிதுதான்போமே. (102)

போமென்று யெண்ணமற்சொன்னேன்புத்தி-பொல்லாத சூதருடன் பொருதவேண்டாம், ஓமென்று அந்திசந்தி யாத்நாள் தன்னை-யுணறுவாய் வங்சிங்சங்நங் உங்கென்றேத்து, வேமென்ற உருநூற்றி யெட்டுமப்பா -விடாமலே செபித்துவர வேணதாகும் சாமென்ற பாஷாண வெள்ளைதன்னைச் - சாதிக்க வுரைப்பதனைச், சார்ந்துகேளே. (103)

கேளப்பா மனமடங்கி யோகங்கொண்டு-கிரியையுடன் பூரணத்தி னுறத்துநின்று, நாளப்பா தவறாதே பூசையோகம் - நாடினூற் கிடைக்குமப்பா நான்சொல் மூலி, வாளப்பா சொரிவதுபோற் காலந்தோறும்-வாமமாய்த் தியானித்தால் வாய்க்கும்யோகம், காளப்பா கண்டத்தான் செயலினாலே-காணலாம் பலதொழிலும் சட்டித்தேரே. (104)

### பாஷாணக்கட்டு.

தேரவே பாஷாண வெள்ளை தன்னைத் - திரமுடனே கட்டியொரு பலமுனைமந்தாம், ஏரவே கொண்டதனைச் சோதிப்பாலில்-யிசையவே கிராசமிட்டு யிணக்கமாக, நேரவே கிழங்கின்சோ ணிதமுங் கொண்டு நேராகத் தோய்ந்தபின்பு கவசங்கட்டிச், சேரவே கிழங் கின்மேற்-கவசமிட்டுச்-செப்பரியகெசபுடத்தில் மாட்டுவாயே.(105)

மாட்டுவாய் புடமேறிக் கட்டியப்பா -மகிமையாம் பாஷாணக் கட்டைக்கொண்டு, கூட்டுவாய் மூலியுட நரம்பினாலே - கூசாமல் அரைத்தனைக் கவசங்கட்டிக், காட்டுவாய் காட்டுத்தீ மூட்டுவாய் நீ-காளகண்ட நீறாகுங் கண்டுதேறு, பூட்டுவாய் பலதொழிலும் வாச்சுதென்று-பூரணமே மனதிலுன்னிப் பொருந்தியாடே. (106)

ஆடவே வேணுமென்றால் யோகம்வேணும் - ஐம்பதுவுந் தன்மயமா யறியவேணும், நாடவே சத்திசிவ பூசைவேணும்-நாலைந்துங் கட்டியே பூணவேணும், தேடவே கன்னமதப் பூவையான - சிறு பெண்ணுள் வாழுமிடந் தெரிந்துநீரில், கூடவே உப்புப்பு யெள்ளு கொண்டு-குறியான சுண்ணமும்மப் படியேகூட்டே. (107)

### வெள்ளி.

கூட்டியே பாய்ச்சிடுவாய் செம்புக்கப்பா -கொண்டாடுஞ் சோமனவன் குறிதப்பாது, நாட்டியே நாலுக்கு ஒன்றுதாயாம் - நாமறிந்த குறியிதுநா யகியாள்சொன்ன, பூட்டிதனை விள்ளாதே மூலியாலே-பூண்டதப்பா யிம்மகிமை புகலொண்ணாது, மேட்டிலயன் விடுகுறியி னுரைப்பாயார்க்கும் - விண்டசண்டி னுதனென விளம்பலாமே. (108)

### துருசு.

விளம்பாதே மூலியுட சாபம்மெத்த -விட்டாடும் உன்குலத்தை வெளியாய்ப்போக்கும், தளம்பாதே குடநீரின் மகிமைபோலத்-தானிருந்தா லின்னமொரு போக்கைக்கேளு, களம்பான நூரிசியது கட்டியொன்று-காணப்பா பலமைந்து கொண்டுநீயும், மூளம்பாதே சுக்கிரன்கண் ணொளிந்தமூலி-மூடதனைக் கொண்டுமேற் கவசம்போடே. (109)

போடதனைக் குண்டத்தீ மூட்டினுக்கால் - பொருந்திகட்டிப் போகுமது புகைகாணாது, ஓடதனைக் கொண்டீச னெடுத்தகண் டம்-ஓடாது தங்குமது உனக்கேயாச்சு, பாடல்தனைக் கொண்டாடி யெடுத்துமைந்தா - பரமனணி நீருகப் பதத்தைக்கேளு, நீடதனை வாழ்விக்கும் சுகத்தைத்தேடும் -நிலப்பயிரின் கிழங்கினது பிண்டந் தானே. (110)

பிண்டமதாம் முதற்கிழங்கு வரிவேரப்பா -போக்குடனே கிழ ங்கதுவின் நவிரங்கொய்து, துண்டதா யுருத்திடுவாய் சுடுவல்கா ணும்-தொட்டெடுத்துக் கிழங்கினையே தூளதாக்கிக், கொண்ட மதக் கண்டரஸதை மாட்டித்தோலால்-கூட்டியே கவசமிட்டுக் குண் டத்தீயில், அண்டர்பிரா ணுயிர்மாளத் தீயைமாட்டி-அதையெடுப் பாய் வெண்ணீரும் அமலன்நீரே. (111)

நீரான துருசுநீர் வேதைகோடி - நிமிளையப்பா அதிற்கோடி நித்தங்கோடி, சீரான தங்கத்துக் கீய்ந்தாற் செம்பாம்-செம்பதை வெள் ளிக்கியத் தங்கமாச்சு, நேரான தங்கத்தை யெடுத்துக்கொ ண்டு-நீமனதாய் நந்தியுட மூலந்தேரு, பேரான யென்மூலம் நீ யறிந்தால்-பிரமனுனக் கிடாகான் பேணிப்பாரே. (112)

பேணுவதே மூலாதி மூலமாகும்-பிரமநவத் தியானமது மூலங் காணும், தோணுவதே மனக்கடினம் துலக்கம்போக்கித் - துய்ய மதக் கும்பகத்தி லேறிப்பூர்ணம், நாணுவதே நவமவசிவ குறியைக் கண்டால்-நாடுமப்பா நானுரைத்த மூலிசூக்ஷம், உண்ணுவதே து ருசுமப்பா நீந்துமட்டும்-உள்ளபடி வேதையதாம் ஊணிப்பாரே. ()

பார்ப்பதென்ன துருசினுட வேதைமெத்த-பார்க்கரிது பார்க் கரிது பகரொண்ணாது, சேர்ப்பதென்ன நவகோடி சித்தரெல்லாம்- திறவாமல் மயக்கிவிட்டார் துரியமைந்தும், கார்ப்பதென்ன யுக மட்டும் வேணுமோதான் - காலினிடை முடிபோக்கிக் காணுகாணு, தீர்ப்பதென்ன வகாரமது வுனக்கேகிட்டும் - சிவசிவா திறந்துவிட் டேன் செம்பொன்மேரே. (114)

மேரென்ற மேருவது நீயேயாகும் - மெய்யான பொய்யதுவும் நீயேயாகும், வேரென்ற வேரதுவும் நீயேயாகும் - விளங்குகின்ற நவமைந்தும் நீயேயாகும், பாரென்ற பாருப்பு நீயேயாகும் - பஞ்ச கர்த்தா ஊைந்துபேர் நீயேயாகும், சாரென்ற சராசரங்கள் நீயே யாகும்-சத்தபரி ரூபரச கெந்தமாச்சே. (115)

ஆச்சப்பா தருசதுவும் நீயேயாகும் - ஆனதொரு சூதமது நீயேயாகும், மாச்சப்பா கருவியுனக் குள்ளேயாச்சு - மம்கம்வம் சிம்மசியுன் னுருவேயாச்சு, பாச்சப்பா தீயதுவும் பஞ்சமாச்சு - பரமுனக்குக் கிட்டாதே பாவம்போச்சு, எச்சப்பா விழியிரண்டுக் கேச்சேயாச்சு-விதுயிரண்டுங் கண்டறிந்தால் யேமமாச்சே. (116)

ஏமமென்ற வாறுனக்கு யியம்பக்கேளு-யேமமதே விழியிரண்டும் யேமமாச்சு, வாமமென்ற தாமமதே நவமுமாச்சு - மருவினின் ருற் கேள்வியது யேமமாச்சு, தாமமென்ற தாமமதே உந்தியாச்சு-தப்பாது யோகமுண்ணத் தானேயேமம், காமமென்ற காமமதே மூலமாச்சு-கட்டறுத்துக் கொண்டவர்க்கு யேமந்தானே. (117)

தாமென்ற யேமத்தின் குறியைக்கேளு - தானேறிக் குறிகடந்தால் தானேயாச்சு, ' வேமென்ற ஆங்காரம் விட்டுத்தேர்ந்தால் - விட்டுனக்கு வேறுமுண்டோ மண்ணும்வேதை, போமென்ற மவுனத்திற் பூண்டிருந்தாற்-பொருளாகும் உன்மேனி பூக்கும்பிண்டம், காமென்று நாம்சொன்னோம் பிண்டமூலி-நலங்குமப்பா யிருந்திடத்தில் நயந்துதேரே. (118)

நயந்தேரக் காணுவது யிந்நூலப்பா-நாலாறுக் கீடாகும் நவின்றவேதை, பயந்தோர்க்குக் கிட்டுமிதிற் றூலசூக்ஷம் - பஞ்சவுப்புக் கருவதுவும் பலிக்குமூலி, அயன்தேடி மால்காணுன் தரித்தநூலு அப்பப்பா அரன்தரித்தா னந்தநூலே, மூயந்தேறக் காணுமப்பா சத்தியாத்தாள்-முடிதரித்தா ளம்மூலி மூலந்தானே. (119)

மூலமென்ற வழலையது மூப்பூவாச்சு - மூதண்டக் கருவதுவு முடிந்தமூலி, காலமென்ற காலனுக்கு மாதிமூலி - கண்டவர்க்கு யெளிதான கமலமூலி, பாலென்றுற் பால்சொரியும் பஞ்சமூலி - பரிந்தெவரும் பொசிக்குகின்ற பச்சைமூலி, ஞாலமிசை மெத்தவுண்டு நடனமூலி-நவின்றிட்டால் வெளியாகும் நயந்துபாரே. (120)

நயந்தோர்க்குக் கிட்டுவது நல்லமூலி - ஞாலமதில் வேறிலைநாதாக்கள் வைத்தார், பயந்தோக்குக் கிட்டுமென்று மறைத்துவேறே பச்சிலையு மண்ணுமப்பா பாடிவைத்தார், கயந்தனொரு கசடருக்காய் காலாங்கிநாதர்-காட்டாமல் மறைத்துவைத்தார் நூல்கடோறும், நயந்தவனே சண்டீசா உனக்குரைத்தேன்-நாதாக்கள் காணாத நாதந்தானே. (121)

நாதமென்ற நாதமதி லுண்டாமூலி-நாதமென்று சொல்லுவது நாதமாமோ, போதமென்றாற் போதமுண்டு அந்தமூலி - போத மது வேறுமில்லை புகன்றாற் பித்தம், நீதமென்ற நீத்தினங்க ளுண் டாமூலி-நீணிலத்திற் கட்டுமந்த யெட்டெட்டுந்தான், வாதமென்ற வாதமதிற் பிறக்குமூலி-வாயாது மத்தொன்றி லாடுவாரே. (122)

வாடுவார் பொன்தேட மயக்கமுற்று-வாட்டுசெம்பு அயத்தில் வெள்ளி அயத்திற்பூண்டை, தேடுவா ருப்புசுண்ணம் திகைத்து மய்யோ-தெரிந்துதென்று மெழுகுசெந் தூரம்பார்ப்பார், பாடு வார் பலபலநூல் தண்டுகண்டு-பாய்ச்சுவார் வேதைக்குப் டாழாம் நூலு, கூடுவார் மயக்கமுற்றுக் கூடிச்சென்று-குடிகெட்டு நூலறி யார் குருகாணுரே. (123)

குருகாணு மூடரப்பா கோடாகோடி-கும்பித்துத் தம்பித்து மாண்டோர்கோடி, உருக்காணு மூலியுட பீடங்காணுர்-உலுத்த ரப்பா மூலிகையால் மாண்டார்கோடி, கருக்காணுர் கட்டதுவுங் காணுர்கோடி-கடைகெட்டு லூதிக்கண் போனுர்கோடி, உருக்கலந் த முதற்பிண்ட மூலிகாணுர்-ஓகோகோ காசளவு பொன்காணுரே.()

காணுரே பொன்னென்ற மாயப்பூட்டைக்-காணுவரோ சண் டாளக் குரும்பர்தாமும், ஊணுரே பொன்னிருக்கும் பீடங்கண்டு உருவளிக்க மாட்டுவரோ உலுத்தபாண்டம், காணுரே கண்டெடுத் த பொசிப்பைப்போலக் - காயத்திற் நடக்கைகளைக் காணுர்பாவி, நாணுது நாணுது பொல்லாவாழ்க்கை-நாய்கொடுவால் மூடருக்கு நாடாமூலி. (125)

மூலிவிண்டாற் சொரிந்தாடும் உலகமப்போ - முடிந்துதப்பா சத்திமயம் மூழ்கிப்போச்சு, காலிவிண்டால் ஒன்றுமில்லை கட்டை யாச்சு-கண்டுகொள்ளு மூலியுட கருத்துமப்போ, நாலுவிண்டா லொன்றுமில்லை யொன்றுங்காணுர் - நாலடங்க நாலுண்டாம் நடக் கும்வேதை, பாலுண்டால் பொருளுதவி பரமுண்டாச்சு - பாவி லொரு பலனுமில்லை பாசம்போச்சே. (126)

போச்சப்பா ஆழியும்பொன் மேருஞ்சேர்ந்து - புகட்டுமப்போ சதாசிவமு மடங்கிவேகத், தோச்சுதப்போ நவகோண சத்தியா கும்-சுழிமுனையும் முனையாகுந் தூலமப்போ, காச்சுதப்பா விண் ணுமண்ணும் பொருளேயாச்சு - கண்ணிரண்டும் மறைத்து மனக் கண்ணதாச்சு, வாச்சுதப்போ சிவானந்தி வாழுமூலி - வாகனப் பெண் ணுத்தாளும் வாய்விண்டாளே. (127)

விண்டவர்க்கே காணுமப்பா வேதைகோடி-வீணருக்குத் தெரியாது வேதைமார்க்கம், கண்டவர்க்கே காணுமப்பா துருசுயோகம் காணாது காணாது கசடர்க்காகா, உண்டவர்க்கே காணுமப்பா சூதசூக்ஷம்-ஒருக்காலுங் காணார்கள் உலுத்தரப்பா, தொண்டர்க்கே காணுமப்பா வெள்ளைப்போக்கு - சூதருக்குக் காணாது துலைந்து போமே. (128)

துலைவதென்ன யிருப்பிடத்தைத் தொட்டோர்க்காகும்-தோணாது துஷ்டருக்குத் தூரமாகும், அலைவதென்ன வாதமென்றதறியார்மூடர்-அடக்கமவ ரிடத்திருக்கு மந்தமூலி, உலைவதென்ன உலையிலிட்டு வூதிவூதி-ஓகோகோ கெட்டலைந்த உலுத்தப்பாண்டம், மலைவதென்ன குகையென்ன வனத்திலென்ன-மாயமென்ன மனம்விட்டாற் காணுந்தானே. (129)

தானென்ற சிவாட்சரமே மூலம்மூலம்-சதாநித்தம் பூரணமே யோகம்யோகம், வானென்ற பொருளுனக்கே தீபந்தீபம்-வாய்க்குமப்போ சுழல்மூலி வாடைதோற்றும், கானென்ற ஐம்பூதம் உன்னைத்தள்ளி-காட்டிவைக்குஞ் சுழல்மூலிக் கடுத்தவேதை, நானென்று நீயென்று மறிந்தாயானால் - நாடுமந்த மூலிகுணம் நாடாம் பொன்னே. (130)

பொன்னாக்கச் செம்புகொண்டு அலைவார்கோடி.-பொன்னிருக்குந் துருசியென்று புகைப்பார்கோடி, என்னாக்குப் பாஷாண வெள்ளைகொண்டு - எடுப்பதற்குப் பொன்வெள்ளி யொன்றுங்காணார், கன்னாக்கும் உலைசூதங் கொண்டுகெட்டக் - கண்ணவிந்து கெட்டவரோ கோடாகோடி, ஒன்னாக்கும் அயக்களங்கு கண்டதென்று - ஓடிவிட்டார் சண்டாள ருலுத்தராமே. (131)

ஆமென்ற வகாரசித்து உனக்குரைக்க-அண்டமுகடுருவிடுமேயப்பாசண்டி, நாமென்ற பேரைவெளி விள்ளலாகா-நவின்றபின்பு தெரியுமந்த நந்திமூலம், சாமென்ற துருசுவெள்ளை சூதங்காணுந்-தங்கமதைத் தன்மயத்தில் தாக்கவேணும், வாமென்ற சிறுபெண்ணை மயக்கிக்கொண்டால்-வகாரமப்போ சிக்கியல்லோ வாய்க்குந்தானே. (132)

தானென்ற வழலையினால் துருசுகட்டி - தப்பாதே உப்பாலே நீத்திக்கொண்டு, வானென்ற சுன்னந்தங் கத்துக்கீய்ந்தால்-வாய்க்குமப்போ தங்கமது செம்பாஞ்சுண்ணம், காணென்ற வெள்ளிக்குச் சுண்ணமீந்தாற்-காணுமப்பா ஆறேழு மாத்துக்காணும், நானென்று சொல்வதுக்கே மாளாதப்பா -நாயகியா ளூறவில்லால் நாடாதாமே. (133)

நாடாது பூரணமே யில்லாவிட்டால் - நாதாக்கள் யோகங்கள் காணவிட்டால், ஓடாது பஞ்சகுறி தப்பிற்றனல்-ஒகோகோ ஒன் றுமில்லை ஓடிப்போச்சு, நாடாது முத்தொழிலும் நடனங்காட்டும் நாயகியாள் தனைவெறுத்து நடனப்பூட்டைக், காடாகத் தான் செபித்துப் புதைத்துவைப்பாள்-கனகமென்ற வேதையைநீ காண மாட்டாய். (134)

காணாது மூலியுட சூக்ஷமப்பா - கண்டறிந்தாற் காணுமையா கனகமப்போ, வீணாகத் துருசுகொண்டு அலைவதென்ன - வேதை யுனக் காகாது வெறும்பேச்சாச்சு, பூணான சூதமது புகைந்து போச்சு-பொய்யாச்சு பாஷாணம் பூத்துப்போச்சு, கோணான மால் தெரிக்கு மந்தமூலி-கொடுமுடிபோல் வேரோடுங் குளிர்ந்தமூலி. ()

மூலிவிள்ளக் காட்டுகிறேன் பின்னையப்பா-மூகடுவுனக் கறிவித் தேன் தெளிவதாகப், பாலிகுண சாலிதய வாணிசூக்ஷம் - பகர்ந் தறிந்தால் மூலியிடம் பார்ப்பாயப்போ, நாலிரண்டு மோராறும் ஐந்துமேழும்-நல்லெட்டெட் டும்வாய்க்கும் நானுரைப்பேன், காலி பல மூலியெல்லாம் காரங்கட்டும் - கட்டுவிண்டு கட்டறிந்து காணு காணே. (136)

காணப்பா காரமென்ற காரந்தன்னிற் - காணுமப்பா பதின் மூன்றி லொன்றுதேரும், தாணப்பா தகரமென்ற தகரந்தன்னில்- தள்ளிவிட்டுப் பதின்மூன்றி லொன்றுதேரும், நாணப்பா வகார மென்ற பூட்டிற்காணு - நல்கிடுவாய் பதின்மூன்றும் மூன்றும்நான் கில், ஊணப்பா ஒன்றுதள்ளி நின்றபூட்டை-யுகமுடிந்த தென்று சொல்லி யூணிக்கொள்ளே. (137)

கொள்ளுதற்கு மூலியதாம் குறியிற்கண்டு - குதிகொள்வாய் மனோன்மணியைக் கும்பிட்டேத்தி, விள்ளுதற்கு உந்தனுக்கா யு ரைத்தேனப்பா-விள்ளாதே சத்திபதம் உன்மேல்வைத்தேன், எள் ளுமய மறிந்தவனே சண்டிநாதா - யிதைவிட்டாற் போக்குனக்கு வேறேயில்லை, உள்ளுமயம் பிரமயமு முரைப்பேன்கேளு - உத்த அண்ட பிண்டதலை வாறுதானே. (138)

தானென்ற சகரமது தொண்ணூற்றென்று - தான்தள்ளிச் சேர்த்திடுவா யொன்றுகாணும், கானென்ற நகாரமதுக் காரங் கொண்டு-கண்டுகொள்வா யறுபத்தி யைந்துந்தள்ளி, ஊனென்ற ரெண்டுமப்பா ஒன்றேயாச்சு - ஓகோகோ மூன்றுமப்பா உதித்துப் போச்சு, மானென்ற மலர்விழியா ளண்டமப்போ - மகிழ்ந்துனக் குத் திறந்துவிட மாயம்பாரே. (139)

பாரப்பா அண்டத்தின் கொலுவையப்போ - பராசத்தி மக்க ளப்பா பார்த்திருப்பார், காரப்பா அவள்கொலுவி லண்டபாகங்- கணக்கிட்டு முடியாது கர்மிகாணன், ஏரப்பா அதுவழியா யூணிட் டாக்கால்-யிருக்குமந்தப் பிண்டகொலு வதனைக்காணு, சாரப்பா அவள்புயத்தின் மீதிலேதான்-சார்ந்தவுடன் நீகாண்பாய்ப் பிண்டந் தானே. (140)

பிண்டமென்ற முதற்பிண்டங் கண்டாயானற்-பிசகாது வாய் திறந்து புலம்புமப்போ, அண்டமது உனக்குதய மானலப்போ - அசைந்தாடும் மேனியெங்குந் தாண்டங் காணும், சண்டனெனு முனையப்போ சதாநந்தித்தாய் - தான்வணங்க அவள்மூலங் காண வேணும், பிண்டவிந்தைக் காணாத மூலியாலே - பெறுவதப்பா வேதைபல தொழிலுந்தானே. (141)

தொழிலென்று லெத்தொழிலு மிதற்கொவ்வாது -சொரூபவா னந்திகொலு சூக்ஷமப்பா, வழியென்றால் வழலையப்பா அதுவே யாகும்-வாகான நாதமது அதுவேயாகும், கழிவென்ற கருவதுவு மதுவேயாகும்-கட்டான யீடமையு மதுவேயாகும், ஒளிவான முப் பூவும் உப்புமாகும்-ஒடுங்குமையா யெட்டெட்டு மொடுங்குந்தானே.

ஒடுங்குவது துருசதனற் பூர்க்குஞ்சுண்ணம் - உப்புவெள்ளை பிண்டத்தோல் வலுத்துப்போகும், அடுக்குமென்றே உனக்குரைத் தேன் தெளிவாயானல்-ஆடுமப்பா நவகோண மண்டத்தாலே, கடுங் கோள்பொய் சூதருக்குப் பாலனதன்-கைபிடித்த சூலமெனக்கண்டு கொள்ளு, படுவேதைக் கொடுங்குவதே பாகமாகும்-பயனறிந்தோர் பாலிப்பர்பா ஷாணக்கட்டே. (143)

## கருவிடையம்.

கட்டுவது பிண்டத்தோல் நிணமுமாச்சு-காயான பின்பதுவே சுண்ணமாச்சு, வெட்டுவது பிண்டரெத்தம் பச்சையாலே - விட்டு தப்பா சூதமல ரதினலாசை, பட்டுதப்பா செம்பதுவுங் களங்கு போக்கிப் - பதிவான அயமுதலாய்க் காணலாகும், விட்டுதப்பா உனையடைந்த பாசம்விட்டு - விண்மயமுந் தன்மயமும் உனக்காம் வேதை. (144)

வேதைபா வெளியாகும் அண்டபிண்டம்-வெளிகண்டா லுனக் காச்சு வேதைகோடி, ஊதையிலே காணுவரோ பதத்தின் வாழ்க் கை-ஒருக்காலுங் காணாது ஓடிப்போகும், வாதையினற் காணு வதே சத்திபூட்டை - வாயாது வாயாது துருசுவெள்ளைப், பாதை யிலே கிடக்குமப்பா வேதைமார்க்கம் - பார்ப்பவனே கண்டெடுப் பான் பதத்தின்பூட்டே. (145)

வேண்டிய கரு.

பூட்டப்பா கட்டுதற்கு அண்டம் வேணும் - பொடிப்பதற்கு முதற்கிழங்கு பூகம்வேணும், ஊட்டப்பா அண்டத்தின் வழிலே வேணும்-ஊண்சதைதோ லெலும்புப்பால் உப்புவேணும், நாட்டப்பா மாய்ப்பதற்கு நாவுவேணும்-நாயகியாள் தன்சீலை யீடுவேணும், கூட்டப்பா யிதுவுனக்கு வாய்த்துதானற் - குழுருமப்போ பூரணத்திற் குடியாவாயே. (146)

ஆவதுவே மனப்பூட்டா லழிந்துபோகும் - அடக்கமில்லார்க் கணுவளவு மாகாதாகா, பாவமென்ன பாவமதாங் கருவழிக்கப் - பலபிண்டத் தலைதரித்த பாவங்கண்டாய், சாவதுவே மெய்யறிந்து தண்டத்தாசை-சார்ந்தெடுப்ப தாகாது சாபம்மெத்த, நாவதுவே நிலைநின்றாற் காணலாகும்-நாடாது சாபமிப்போ நாடிப்பாரே. (147)

பாரப்பா நகாரவட்டம் அறுகோணங்கீறி - நடுவரையுங் கடைவரையும் ஓமதாக்கி, தீரப்பா கோணத்தில் வய-நய-சிய மூன்றும் அக்னி-திறமையுடன் நம்-வம்-உம்மூன்றும் வருணனாகும், ஏரப்பா யங்-கிங்-சிங்மூன்றும் நிருதியாகும்-யெமகண்ட அக்-இக்-உக் மூன்றும் யீசான்யம், காரப்பா ருத்ரன்ருத்ரி மயானகண்டம் - காட்டுவாய் கோணநவ சூலம்போடே. (148)

போடுவாய் நடுவரையில் சு-ரி-ந வென்றுமாட்டி -பொங்குமுடனேதுவதோ குருவைக்கேளு, கூடுவது ரிம்ரூம்னும் ஊமஆமென்றே-குறிஓரா யிரத்துநூ றுருவையோத, ஆடுவாள் மனோன்மணியாள் ரூபங்கண்டு-ஆர்ப்பரிப்பாய் ரீங்காரவோங் காரமிட்டுச், சூடுவாய் மலர்ப்பதத்தில் விழுந்துஓதத் - துலங்குவாள் மனக்கசட்டின் சூக்ஷங்காணே. (149)

காணப்பா சண்டீச நாதாநாதா-கமலமது கண்திறக்குங் கதிரோனைக்காணப், பூணப்பா அம்மொழியா ளுரைப்பாளாத்தாள்-போதுமப்போ உன்மேனி பூத்துப்போச்சு, ஆணப்பா ஆணுமல்ல பெண்ணுமல்ல - அரகரா நாதமில்லா தமைந்தமூலி, நாணப்பா உரைத்துவிட்டேன் மாயப்பூட்டை - நமனுமென்மேல் வஞ்சமிடநவின்றிட்டேனே. (150)

இட்டேனே கமலமுறை வாணிபாதம்-யிணங்கினேன் பூரணத்தை யோகங்கொண்டு, பட்டேனே யல்லல்வெகு பாட்டிற்சென்று-பாதமங்குச பாசசெந் தூரத்தானே, விட்டேனே கும்பமுக சாலை கண்டு-விகண்டமணி பூரகத்தை யோங்கித்தாண்டி, மட்டேறுங் குழலாள்தன் பதம்பணிந்து-மாயமென்ற பூட்டறிந்து மகிழ்ந்து கண்டேன். (151)

கண்டனப்பா வழலையென்ற போக்கையெல்லாம்-கண்டதில்லையென்னிலுமே வழலைமார்க்கம், விண்டேனே உப்பென்ற தீர்க்கமெல்லாம்-விதவிதமாய்க் காணவொரு பலனுமில்லை, சண்டாளக துருசதனுற் கோடிகண்டேன் - சண்டிகட்டி நீத்தவில்லை சாம்பலாச்சு, பண்டான பாஷாண வீரம் பூரம் - பார்த்தவித்தை கோடியுண்டு பலன்காணேனே. (152)

கர்ணேனே வேதையுப்பு சப்பாய்ப்போச்சு-கடுந்துருசு பாஷாணம் காற்றாய்ப்போச்சு, ஊணேனே சுவாசமது ஒடுக்கத்தாலே - ஒண்ணரையுங் கால்மூன்றும் ஓடிப்போச்சு, ஆணேனே பெண்ணோவென் றறியாப்பூட்டை-அறியாமற் பட்டதொரு கோடியுண்டு, சாணேனோ முழமேனோ வென்றசூட்சம் - சாதகமாய்க் கண்டவனே கருதியறிவானே. (153)

அறிவாலே காண்பதப்பா சாரப்போக்கு - அறிந்தவனே மூலிகண்டு தேறுவானே, தெரிவானே மூலியுட நாதமப்பா - தெரியாதார் தேறுவரோ சாரப்போக்கை, மறிவதே மாயமப்பா சாரமென்று-மாணவனே காண்பதுண்டு மாயமூலி, பிறிவதே கருணிகச் சாரின்சூக்ஷம்-பிரித்துரைப்பேன் சாரத்தின் பிண்டமூலம். (154)

மூலமப்பா வேறில்லை சாரமூலம் - முண்டமப்பா பிண்டத்தினுதித்தசாரம், தூலமப்பா காரமதிற் சேர்ந்ததாலே - துகண்டசத்தி நாதமது சாரமாச்சு, பாலமப்பா வேதைக்கு உனக்குரைத்தேன்-பலதொழிலு மிதற்குள்ளே ஒடுக்கமாகும், சாலமப்பா வேறில்லை யிதுவேயாதி-சாற்றுகிறேன் விபரமிதே சார்ந்தபேரே. (155)

சாரக்கட்டு.

பேரப்பா சாரபலம் பத்துவாங்கிப்-பின்கரைத்துப் பாத்திரத்திற் கீழண்டத்தைத், தூரப்பா அதையுடைத்து நீரைவிட்டுச் - சூழ்கருவை நசிக்கியிட்டுத் தீயில்வைக்க, மீரப்பா யெரித்திடவே கட்டிப்போகும்-விதமான யிச்சாரக் கட்டுமாகும், நாளப்பா சாரத்தின் போக்கைவிள்ள-நம்மாலு முடியாது நாட்டிப்பாரே. (156)

பாரப்பா சாரமென்ற கட்டுப்போக்கு - பாயுமப்பா அண்டமூடுருவித்தானே, ஊரப்பா களங்கென்ற தெல்லாமாத்தும் - உத்தமனே கற்பமிட்டா லுறுதியாகும், நாரப்பா மூலியந்த வேகச்சாரம்-நாதமுதல் பலதுக்கும் ஆதியாச்சு, சீரப்பா சாரமென்ற கெட்டிச்சாரம்-தீர்ந்தவனே காண்பன்நந்தி துறவுதானே. (157)

### ரசக்கட்டு.

தானென்ற சூதமது பலமேகொண்டு-சாய்த்திடுவாய் முள்ளிக் காய் கசப்புக்கட்டும், வேனென்ற மூன்றுநாள் ரவியில்வைக்க - விதமான சுத்தியது வாகுமப்பா, காணென்ற சூதத்தின் திட்டுப் போகக் - கட்டுமப்பா வித்தில்லாக் காயில்வித்தாம், நானென்று சொல்லாதே காயின்சூக்ஷம் - நவின்றனப்பா பொன்மேனிக் காயிற் காணே. (158)

காணுவது பொன்னிறமாங் காயின்சூக்ஷம் - கண்டிட்டாற் காணலாம் மூலியாலே, ஊணுவது காயில்கட்டுஞ் சூதக்காக்கு - உடு சீலை முதற்பிண்ட மதனைப்பார்த்து, நாணுவது மற்றதப்பா ஆறும்பார்த்தால்-நங்கையவள் முகமினுக்கைக் கண்டுகூர்ந்து, தூணுவது முன்பின்பார் நிலப்பயிரைத் - துலைத்திடுவாய் துணித்தமான் கிரித்தானே. (159)

கிரித்திடுவாய் முதற்கிழங்கு வுருவாய்க்காணும் - கிளித்தெடுத்து அங்கசத்தோ டூரலிலிட்டுப், பிரித்திடுவாய் மைபோலே யிடித்துக்கொண்டு-பிசகாமற் கவசமிடு சூதத்துக்கு, மரித்திடுவாய் அணலிதோலால் தீயைமூட்டி-மாட்டுவாய் காட்டுததீ மாண்டுபோச்சு, எரித்தசிவன் கண்ணுச்சு யேமமாச்சு - இனிமையுள்ள சண்டீசா எளிதாய்விட்டேன். (160)

விட்டனப்பா சிவானந்த மூர்த்திநாதம் - விடுபட்டு அழிந்து கட்டி வேதையாச்சு, பட்டனப்பா ஒருவருக்கும் விள்ளொண்ணுது-பாழாச்சு பாழாச்சு பரமலோகம், கட்டான சண்டாளக் கசடருக்குக்-காணுது காட்டாதே கக்கிப்போகும்; ஓட்டாத நாதமப்பா உலகநாதம்-உன்பதமுந் தன்பதமு மொடுக்கமாச்சே. (161)

ஆச்சப்பா சத்திசிவ மடங்கிப்போச்சு-அரகரா வேதையென்ற வாதமாச்சு, போச்சப்பா பலதொழிலு மிதுவேயாச்சு-பொல்லாத பயல்களுக்குப் புகலொண்ணுது, பாச்சப்பா யோகமில்லா மடையருக்குப்-பலியாது யிவ்வேதை மாயமாகும், காச்சசப்பா கண்துலங்கு மாத்தாள்சொன்ன-கனகமப்பா விள்ளாதே கசடர்க்காமோ. ()

ஆமென்ற சூதத்தைக் குகையிலிட்டு - ஆச்சென்றும் போச்சென்றும் பாகந்தப்பி, ஓமென்ற மூலிபத மறிந்திருந்தும் -உதவாமற் செய்பாகத் தோடித்தென்பார், சாமென்ற சண்டாளப் பிணங்களப்பா - சதாகோடி காலமெல்லாஞ் சார்ந்தாலாமோ, ஊமென்ற குகையூதிக் கெட்டமாந்தர்-ஒருகோடி கணக்கிடவு மொவ்வாதென்னே. (163)

ஒவ்வாத வார்த்தையது நிலைப்பதேது - ஊதியே கெட்டமாந்த ருறவாகாது, செவ்வாயாள் கதிர்கிரண திங்களாத்தாள் - சிவந்த வளை பிண்டத்துக் காதியப்பா, எவ்வாறு கண்டவளைப் பூசித்தே த்தி-யிதம்பேசித் தரித்திட்டாற் குருதிதோயும், அவ்வாறு சவ் வாது கொண்டுநீயும்-அந்தரத்த மதிலிடவே நாட்டங்கேளே. (164)

கேளப்பா குருதியதில் திட்டம்மூன்று-குமரிபொங்கும் வகை யறிந்து யெடுக்கவேணும், தூளப்பா ரவிபடவே சுவரித்தானுற் - சுகமுனக்கு வேறில்லை சொர்னமாச்சு, நாளப்பா அண்டத்தின் கருவெடுத்து-நாயகியாள் தன்சீலை கவசமிட்டு, மீளப்பா தானுட னே புளுகுகூட்டி-மீட்டுசெந் தூரிக்குந் தீயிற்றானே. (165)

தானென்ற பிண்டத்தாற் கட்டும்மூன்றும்-சந்தேக மில்லையப் பா சாபம்மெத்த, வேனென்ற குருதியுட மூலிதானும்-வெளுமை யென்ற கலையதனிற் பட்டுதானுற், போனென்றாற் போகாதுவெள் ளாவியிட்டும்-புத்தியுட னறிந்துகொள்ளு மூலிசூக்ஷம், நானென் ற குறியெவர்க்குங் காட்டவேண்டாம் - நாயகியாள் பரவசமே நம் மைத்தாக்க. (166)

லிங்கக்கட்டு.

தாக்கவே யின்னமொரு சூக்ஷங்கேளு - சாதியென்ற லிங்கத் தைப் பலமேகொண்டு, காக்கவே யரைக்காணி தூளிற்சேர்த்துக்- கவசமிடு பிண்டத்தோல் மூடித்தீயிற், சாய்க்கவே தணலிடவே கட்டிப்போகும்-சாய்க்காடைப் புடமிடவே தங்கமாகும், வாய்க் குமே கட்டான லிங்கங்கொண்டு - வாழலாங் கோடிவித்தை வாய்க் கும்பாரே. (167)

லிங்கமெழுகு.

வாய்க்குமே மெழுகுலிங்க மாகவென்றால் - மைந்தனே சண்டு சா மார்க்கங்கேளு, காய்க்குமே வெடியுப்பு கரியுப்பு வளையலுப்பு கட்டான சவுட்டுப்புக் காந்தியுப்பு, மாய்க்குமே ஐந்துப்புங் கார சாரம்-மகத்தான துருசுவெள்ளை பூரம்வீரம், தேய்க்குமே சார முடன் விந்துங்கூட்டிச்-சிவசிவா வகைக்குபலம் நிறையொன்றாமே.

ஒன்றான பலமதனைப் பொடித்துச்சேர்த்து-ஒகோகோ என்ன சொல்வேன் உம்பர்சாக்ஷி, கன்றான வேதவல்லித் தாய்நாதங்கொ ண்டு - காட்டிடுவாய் பொடியிலிதைக் கலக்கத்தானே, பன்றான பொடிகலந்த நாதத்தோடே - பாய்ச்சுதற்குச் சொல்லக்கேள் பரம யோகி, ஒன்றான ஒன்றல்லோ மகனேயப்பா-உற்றஅண்டந் தனை யெடுப்பாய் பத்திதானே. (169)

அண்டக்கிருதம் செயநீர்.

பத்தியாம் அண்டத்தை யெடுத்துவந்து-பாரதனை யுடைத்து மெள்ள மைபோலாக்கிச், சத்தியாம் மனோன்மணியைத் தியானஞ்செய்து - சதமாக சிம்யிம்வம்மென் றோதியந்த, முத்தியாம் நாதம்விட்ட பொடியைத்தூவி - மூடுவாய் மேலேயொரு பாண்டந் தன்னை, அத்தியாம் முகவனையே போற்றிசெய்து - அரகரா ரவியிட்டுத் திறத்தைக் காணே. (170)

காணவே சொல்லிவிட்டேன் வெளிவிடாதே-கனகமுனக் காதியது கர்மநோய்க்கும், பூணவே ரவியிலிட்ட பொடியைப்பாரு - புகழாக யிராப்பகலே நாளேமூன்று, தோணவே நின்றிடவே மூன்றும்நாளில்-துலங்குமப்பா செயநீரின் சொரூபம்பாரு, மாணவே யதைக்கலக்கி யிருத்துக்குப்பி - மைந்தனே பதனமிட்டு வரிசை கேளே. (171)

கேளுமப்பா செயநீரில் நின்றசத்தைக் -கிளர்ச்சியுடன் ரவியிலிட்டு உலர்த்தித்தூளாய், மீளுமப்பா தூளதனைப் பதனம்பண்ணி-மேன்மையுடன் சீனியோர் பலமேயிட்டுத், தூளுமப்பா சண்டீசா சன்னிதோஷம்-சோகைபல வாதமுதல் யாவற்றுக்கும், ஆளுமப்பா வெருகடியா வின்பாலிலீய - அப்பனே அதுவகலும் வாறுதானே. (172)

தானென்ற பத்தியமோ புளிபுகையைநீக்கு - தப்பாது தப்பாது இருதமப்பா, வானென்ற பலருக்கும் வாய்த்ததிந்த-வகையான அண்டநவ கிருதசூக்ஷம், மானென்ற யென்னப்பன் யென்தாய் சொன்ன-மர்மமிது விள்ளாதே மாயமாகும், நானென்ற நிலைமை யுனக் குண்டேயானல்-நாயகனே செயநீரின் போக்கைக்கேளே. ()

செயநீர்வித்தை.

கேளப்பா செயநீரி லாடுஞ்சூக்ஷம் - கிருபையுள்ள சண்டீச முனியேபாரில், பாளப்பா கொலைகளவு பொய்யருக்கும் - பராபரியாம் நூல்பாராச் சண்டிகட்கும், நாளப்பா சென்றுலு மிதனை மைந்தா-நாடாதே நானென்ற வாக்குப்பொல்லா, கூளப்பா கக்கிவிடும் நாய்போலாவார்-கும்பகமும் பூரணமுங் குறைந்துபோமே. ()

போமென்று யானுரைத்த மொழிபொல்லாது - போக்காதே போக்காதே புத்திவேணும், தாமென்ற ஆணவமே தள்ளவேணும்-சதாகாலம் பூரணத்தைச் சாரவேணும், ஓமென்ற சிவாயத்தை நின்றுயானல்-உமக்கல்லோ கிடைக்குமந்த உம்பர்லோகம், நாமென்றுந் தாமென்றும் யெண்ணவேணும் - நாதாந்தப் பரவெளியை நாடும்பாரே. (175)

பார்க்கவே அண்டசெய நீரிலப்பா-பாய்ச்சுவாய் செம்புமோர் பலமேகாய்ச்சித், தீர்க்கமென்ற களங்கறவே யிவ்வாறுமூன்று - செய்தசெம்பைக் காய்ச்சிடுவாய் தட்டித்தட்டி, ஆர்க்கமென்ற செம்பதனைத் தங்கத்துக்கு-அப்பனே ஊட்டிடுவாய் நாலுககொன்று, சேர்க்கமென்ற சொர்க்கமப்போ துலங்கிக்காணுஞ் - சீரான செம்பாகுஞ் சூதுகாணே. (176)

சூதான செம்பதனைச் செயநீர்விட்டுச் - சுவரிடவே காய்ச்சி வைப்பா யுப்பாய்க்காணும், நூதான செம்புப்பைக் கலயமிட்டு - நுணுக்கமுள்ள தையல்பட்டை வராக னிட்டு, ஊதான கவச மிட்டுச் சீலெசெய்து - ஊதிடுவாய் நாழிகையி லொன்றிலேதான், வாதான செந்தூர மாகும்பாரு-மகிழ்வான வேதைக்கு மாகுமாமே.

ஆமப்பா தீர்ந்திடவே காணும்பாரு-ஆண்மையுள்ள தாம்பரத்தின் சோதிக்காட்சி, நாமப்பா புத்திகெட்டு விண்டோங்கண்டாய் நாயகியாள் திருவாக்கு நாசம்பண்ணும், காமப்பா வுண்டவர்க்குங் கசடருக்கும்-காட்டாதே மூலியண்டஞ் சாபமெத்த, வாமப்பா செந்தூரம் வாய்க்கும்நல்ல - வார்த்தையுள்ள குணவானுக் காதி காணே. (178)

காணுவது செந்தூரக் காட்சிகேளு - காயநிலை கண்டவர்க்கே கைகொண்டாடும், பூணுவது செம்புமோர் பலத்துக்கப்பா புகட்டுவாய் செந்தூரம் நாலைத்தானே, பேணுவாய் புரமெரித்த தசமாத்தாகும்-பெருமைபெற்ற சண்டீசா பொல்லாவேதை, வாணுவாய் வாயிகழ்ந்து விண்டேனிந்த-வாக்குதப்பி வெளியில்விட்டால் வாயாதாமே. (179)

தாமென்ற நந்திகொலுப் பிண்டம்பிண்டம்-தப்பாது அண்டமென்ற மூலிபீடம், சாமென்ற புவியோர்க்கு யெளிதா மிந்நூல்-தப்பாது யிதின்திறவு ஐம்பதுக்குள், காமென்ற கனகரச மான மூலி-கண்ணுன கண்ணப்பா கடினம்மெத்த, ஊமென்ற ஓங்கார தீபங்கண்டால்-உனக்கல்லோ வாய்த்துதிந்த உறுதிப்பூடே. ()

பூடென்றால் நகாரத்திற் பூத்ததுண்டாம் - புகலாது யெவ்விதமும் புத்திவேணும், கூடென்றாற் சிகாரத்திற் செடியாமூலி-கூரான நூல்பாராக் குருடர்க்காகா, தூடென்றால் வகாரத்திற் காயாமூலி - துஷ்டகுண வான்களுக்குத் தூரம்தூரம், பாடென்றால் அகாரத்தி லண்டமாச்சு-பரிவாமின் னுன்குமாதி மூலிதாமே. (181)

தாமென்ற நம்மதிலே யிலையதாச்சு - தவறாத யம்மதிலே பட்டையாச்சு, போமென்ற வம்மதிலே பூவுமாச்சு - பொருளான சிம்மதிலே காயுமாச்சு, ஆமென்ற பூவிதழும் அங்கமாச்சு-அவ்விலது தானாத வங்கமாச்சு, சாமென்ற அண்டமே நங்கமாச்சு-சதமாகு மண்டரச சிங்கமாச்சே. (182)

சிங்கமென்ற நவ்வேழுஞ் சூதமாச்சு - சிவந்துவரும் மவ்வேழுஞ் சிவந்துபோச்சு, அங்கமென்ற தவ்வேழுந் துருசிற்கட்டும்-யகாரமென்ற சவ்வேழும் நீத்திப்போடும், மங்கமென்ற றவ்வேழும் வெள்ளைகட்டும்-மயக்கமென்ற வவ்வேழும் நீத்திப்போடும், துங்கமென்ற லவ்வேழுஞ் சாரங்கட்டும் - துடியான ழகாரமே நீத்திப்போமே. (183)

போமப்பா யம்மாறில் வங்கங்கட்டும் - பொல்லாத ஞம்மாறில் நீத்திப்போகும், வாமப்பா தவ்வாறில் தீபங்கட்டும்-வளமாக அவ்வாறில் நீத்திப்போகும், தாமப்பா ளவ்வாறில் கெந்திகட்டும் - தப்பாது டம்மாறில் நீத்திப்போகும், ஓமப்பா உம்மாறில் வீரம்பூரம் ஒடுக்குமப்பா அண்டமது ஒடுங்கிப்போமே. (184)

ஒடுங்கிப்போம் பலபலவும் மூலியாலே-யுகமுடிவு ஆச்சுதப்பா உண்மையாகும், மடங்கிப்போஞ் சதாசிவமுஞ் சத்தி வாழும் - மாய்ந்துவிடும் மயக்கமில்லை மாயாமூலி, கடங்கிவிடும் அம்மூலி பேருங்கண்டு-காயசித்தி பத்திமுத்தி கண்டுகொணு, அடங்கிவிடும் அம்மூலி உனக்குவாய்க்கும்-அரகரா பூரணத்தி லமர்ந்துபோற்றே.

போற்றுவாய் இம்மென்ற சூக்ஷங்கண்டு - பொறிகளைந்தும் மனமூணிப் பூட்டிக்கட்டும், மாற்றுவாய் ஐங்கோண வகையிலக்கம் வாயடங்கக் கொண்டவனே வாமரூபன், சாற்றுவதே மனமூணிப் பத்திப்பார்க்கத்-தப்பாது மூலிமுதற் கிழங்குவாழ்க்கை, ஏற்றுவது உன்னறிவே மனக்கண்ணாகும்-யிகபாமு முனக்குள்ளே யிருக்குந்தானே. (186)

தானென்ற மூலியொன்று ஒன்றேயாகும் - தன்னறிவு அறிவதுவும் ஒன்றேயாகும், கானென்ற பொருளறமும் ஒன்றேயாகும் கன்னியர்கள் நாதமது ஒன்றேயாகும், வானென்ற மண்ணும்விண்ணும் ஒன்றேயாகும்-வாய்ப்பதுவும் மாய்ப்பதுவும் ஒன்றேயாகும், நானென்ற ஆணவமே ஒன்றைநீக்கி - நல்குமப்போ சுழிமுனையில் நாதங்காணே. (187)

காணப்பா யிந்நூலில் மொழிந்தசூக்ஷம் - கண்டறிவாய் பயன் பொருளைக் காணுயாகில், நாணப்பா மூலிவழி காட்டக்கேளு - நடு வரையால் நடனவொளி நாட்டிக்கொண்டு, பேணப்பா கலகலென நடக்கும்வெய்பு - பிடியிடையாள் மணம்புரியத் தொண்டநாட்டில், வேணப்பா அம்மூலி தெரியாமாந்தர்-விஷங்கண்ட விஷம்போலே விள்ளொண்ணுதே. (188)

ஒண்ணுது யென்னசெய்வேன் சண்டிசாகேள்-உபரசமே நாக மாம் உகாரங்கட்டும், எண்ணுது யெவ்வாறும் யேமகூடம் - யெக் காலங் காணுவது யிகபரத்தை, பண்ணுது சகலகலை வாணிவாழும்- பதுமமலருனக்கெய்தும் பரமுமாகும், வண்ணுனும் வாழ்வடை வான் நாவால்விண்டேன் - வசனிப்ப தின்னமொன்று வாழ்க்கை பாரே. (189)

பாரப்பா மஞ்சக்கொடி வழலைபாரு - பரிவான வழலையினுல் விந்தைக்கட்டு, சாரப்பா விந்தாலே தூரிசைநீத்து-சதமாயந் நீரா லே வெள்ளைநீத்து, தூரப்பா வெள்ளையினுல் சாரத்தை நீத்து - துடியான நீத்தாலே எல்லாம்நீத்து, ஆரப்பா அறிவார்கள் யிந்த மார்க்கம்-அப்பனே சாரத்தாற் செயநீர்செய்யே. (190)

செய்யவே வேணுமப்பா சாரநீத்தைச்-சிறப்பாகப் பலமொன் று பாண்டத்திட்டு, உய்யவே மூலிமுதற் கிழங்கின்மூரல் - உதித் திடுவாய் நசுக்கியதி லொக்கக்கூட்டு, கய்யவே அண்டத்தை யு டைத்துமையங்-கருகயனக் காய்பத்து நசித்துப்பிழிந்து, பய்ய வே நீயெடுத்து கலக்கமூன்றும்-பரிவாக ரவியிலிட்டுப் பூட்டைக் கேளே. (191)

கேளப்பா சண்டிசா சாதிலிங்கம்- கிரிகையுள்ள கட்டியொரு பலமொன்றாகத், தாளப்பா அதிலிட்டு ரவியில்வைக்கச் - சாயுமப் பா சத்திகிரி சாய்ந்துபோச்சு, நீளப்பா நாளைந்து பதமாய்ப் பார்க்க-நீண்டகட்டி தான்கரைந்து நீத்திக்கட்டும், சூளப்பா சொல் லாதே யதையுருட்டிச்-சுகமாகு மின்னமொரு சூதைக்காணே. (192)

காணுவாய் உருட்டியதோர் லிங்கப்பூட்டைக் - கதித்தஅயக் கம்பியினி லரைத்துப்பூசி, ஊணுவாய் எள்ளெண்ணெய் தீபக்காந் தியுட்படவே யிளகியது அத்துவீழும், தோணுவாய் அம்மெழு கை யுருட்டிக்கட்டித் - தொந்தமுள்ள தாம்பூரச் சிமிழில்மாட்டி, நாணுவாய் வகாரமென்ற சூதுக்கய்யா-நாட்டுவா யிம்மெழுகை நல மாய்த்தாமே. (193)

தாமென்ற செம்புஅயம் வங்கத்தோடு-தப்பாது பாயுமில்லை சாரங்கேளு, வாமென்ற செம்புசுத்தி மூலியாலே - வாய்த்தாக்கா லிம்மெழுகிற் சொர்னமாச்சு, போமென்ற வெள்ளிக்கம் மூலிசுத்தி-பொருந்தினல் மாத்தில்லாத் தங்கமாச்சு, சாமென்ற அயத்துக்கு மூலியாலே-தான்சுத்தி யாகில்வெள்ளி தப்பாதாமே. (194)

தப்பாது வங்கமப்பா சுத்தியாகில் - தானிடவே களங்கத்த செம்புமாச்சு, ஒப்பாத சூதமுத லோடாதப்பா-உருக்கிடவே நிற்குமந்த மெழுகின்கூறுல், இப்பாரிற் பண்டிதற்கு நீத்தினங்கள்-யியல்பாகு மிதினுடைய மேன்மைபார்க்கச், சப்பாணிப் பிள்ளை முதல் நடக்குங்கண்டாய் - சதாசிவனுஞ் சத்தியுரைத் திடுவாள் தானே. (195)

தானென்ற மிம்மெழுகின் வாறுசொன்னேன் - சண்டாளர்க் குரையாதே சத்திவாக்கு, பானென்ற பருதியுனைக் காணமாட்டான்-பாழாச்சு உன்மேனி பறந்துபோச்சு, ஊனென்ற தேகத்துக் கொன்றுங்காணுய்-ஒகோகோ ஒடுங்கிப்போ மொன்றுமில்லை, சானென்ற அங்கத்தைக் கடைகாணுமற்-சாய்த்துவிடு மென்வாக்குத் தப்பாதாமே. (196)

தப்பாது யிப்பொருளாம் முந்நூற்றுள்ளே - சாற்றினே னிருநூற்றில் வெளியதாக, ஒப்பாக நூற்றில்யான் விண்டுசொன்னேன் உன்னறிவு மனமுண வுனக்கேயாகும், இப்பாரில் யாவருக்கும் விள்ளவேண்டாம்-யிகபரமு மிழந்திடுவா யேமன்வாழ்வாம், செப்பரிது செப்பரிது நூலோயில்லை - சிவசிவா சொல்லுகிறேன் திறமாய்க்கொண்டே. (197)

கொண்டாலும் யெந்நூலே குறைவராது - கொண்டவர்க்குக் காணுமது குறிதப்பாது, கண்டாலும் மெய்ப்பொருளைக் காணக் காட்டும்-கசடராய் விட்டாலோ காணர்காணர், பண்டான விதி வசமோ விட்டவாறே-பாழாகும் மூலிபலம் பாயாதப்பா, சண்டாளர்க் கிந்நூலைத் தந்தாயானல்-தலைவெடிக்கு மாமிந்த மர்மமாமே.()

ஆமிந்த நூலுமப்பா மார்க்கம்பொல்லா-அடிதுடங்கி மூலியுட வாறுகண்டாய், போமிந்தக் கடினமென்ற சூக்ஷந்சொன்னேன் - புத்தியுட னுணர்வாலே பூணிப்பாரு, காமிந்தக் காமுகர்க்குக் கழுத்துநூலாம்-கண்ணவிந்து மாய்வரப்பா கடலில்மூழ்கி, நாமிந்த வாறுமப்பா கண்டதாலே-காட்டினேன் சண்டீச நாதமாமே. (199)

நாதமென்ற விந்துதித்த வாறுகேளு - நல்லஅண்ட பிண்டமென்ற வாறுகேளு, போதமென்ற கற்பூரப் பூட்டைக்கேளு - புரிசடையா னணிமங்கைக் குறுதிகேளு, கீதமென்ற அவள்சீலைப் பூட்டைப்பாரு-கிருபையென்ன அவள்சிகப்பின் திறத்தைப்பாரு, வாதமென்ற வாதமது வயித்தியத்தின்கூரு - வாய்க்குமிந்த நூலில் மனம் வைத்துப்பூணே. (200)

வேறு.

பூணே யைந்து பொறிகலங் காமற்
காணே மனக்கண் களிகூர்ந் திருவருள்
தாணே வேட்கை சச்சிதப் பீடமேல்
ஊணே புத்திகொண் டொடுங்கி யேறிடே. (201)

ஏறிடு கம்பத் திறைமுடி வசத்திற்
கூறிடு குண்டலி கொடியேறு பூரணம்
வாறிடும் யோக வழிகடந் தந்த
தூறிவி ஞைனி சுந்தரி வாழ்க்கையே. (202)

வாழ்க்கை யறிந்தபின் மலரிரு பீடங்காண்
ஆழ்க்கைக் கும்பத் ததனிலே சார்ந்துபின்
மாழ்க்கைக் கோடி மான்மூல மேலிடம்
பாழ்க்கை வங்கணப் பாய்சத்தி யாதரம். (203)

ஆதர மெவ்விடம் அறிந்துபின் நந்தியின்
பேதமில் வாசி பிரிவினைக் கண்டுநீ
மாதவ ரவ்விட மகண்ட சாலையில்
வாதர வொத்திட வாய்ப்ப தறிந்திடே. (204)

அறிந்திடக் காணு மாத்தாள் மகிமை
பிறிந்திட வேண்டாம் பின்னைவே றிலையுனக்
கறிந்தவர்க் கன்புக் காகுமென் றென்பது
செறிந்திட வேண்டாம் சிவமந் திரமிதே. (205)

மந்திர மூலமே மாட்சியென் பதுசீர்
தந்திர சாலமே சதமதுக் கானது
வந்திரப் பூட்டுமே வாய்ப்ப தெப்பொருள்
சந்திர சேகரன் தாயுடன் தாக்கவே. (206)

தாக்கிடக் கூட்டுஞ் சமத்துள்ள மூலி
வாக்கிடக் காட்சி வந்தருள் செய்யும்
பாக்கிய மென்பது பரிரச மென்பதே
நாக்கினுட் டுறவுசெய் நல்லுண் ணுவதே. (207)

உண்ணு வென்பது உயர்மூலிக் குள்ளது
கண்ணு வென்பது கருந்துளி ராகும்
பெண்ணு வென்பது பேசும் பிணைடமே
அண்ணு மூன்றும் அறிந்து சேர்வதே. (208)

சேர்வது கக்கத் திரளண்டத் தருவு
கார்வது வதின்கரு கனமுளைப் பிண்டம்
ஊர்வது திங்கள் ஒன்றின் மேலது
சார்வது திங்கள் தன்கரு வாவதே. (209)

கருவது திங்கள் கண்டா னுகில்
உருவது கமல மூருஞ் சூலையாய்
பொருவது வாரிற் பொன்னிற மேனி
கருவது பத்திற் காய்முதற் பிள்ளையே. (210)

பிள்ளையைப் பெறுபவர் பேணிய நாளப்பா
கள்ளந் தென்திசைக் கசப்பெனத் தள்ளுவர்
மெள்ளக் குடதிசை யென்றைக்கு மாகா
செள்ளக் கீழ்திசை தேகங் கொஞ்சமே. (211)

கொஞ்சமென் றெண்ணுர் கூடும் வடதிசை
பஞ்சமே யில்லை பறந்தது வறுமை
மிஞ்சிய பிள்ளை மிகவலு வாகும்
சஞ்சல மில்லை சகஸ்திர மூலியே. (212)

மூலியாம் பிள்ளை முதற்பிள்ளை நாளது
காலிநா ளொன்பதிற் கமல மலரும்
வாலியாம் பிள்ளை வயதுபதி னைந்தில்
பாலியாஞ் சட்டை பருத்துதிர் மேனியே. (213)

மேனியிற் சட்டை மிகப்புட னுதிரக்
கானியிற் பல்லும் கழன்றிடும் காளேறத்
தானியக் காமத் தருலிங்கம் பருக்கும்
மானியச் சட்டை மறந்து வருவதே. (214)

வருவது திங்க ளொன்றினிற் கள்ளன்
தருவது கண்டு தரிப்பான் தலையவன்

குருவது குருதி கொண்டுணர்ச் சியினில்
தருவது அறிந்தவர் சாம மூலியே. (215)

மூலியே பிள்ளையை முந்திச் சுமந்ததால்
தாலிதன் தாயும் தலைப்பிள்ளை முடிபோய்
சாலியா முண்டத் தனலிங்கத் தன்பால்
பாவிட் டேனே பரிவாய்வளப்பளே. (216)

வளக்கக் கருத்தினில் வசப்பட்ட பிள்ளை
தளர்க்கக் கருவிட் டானதைக் கள்ளன்
களக்கணு ளெண்ணிக் கன்னிக் குறவாய்
பளக்கப் பசுநீர் பாய்ந்து வளப்பரே. (217)

வளக்கக் கள்ளனும் வாய்க்கப் பதமறி
குளக்கத் திங்களோ கோலமு மிரண்டாம்
நிளக்க யெண்ணினல் நெறிதப் பாமலே
பளக்கப் பழக்கமாய்ப் பார்த்தரிப் பானே. (218)

தரிப்பான் தலைபோய் தான்போன முண்டம்
நரிப்பான லிங்க நாதனை வெட்டி
மரிப்பாள் பதலமாய் மாய்ந்துபொன் மேனி
இரிப்பான் பழுத்திட யெடுப்பதா முண்டமே. (219)

முண்டமாம் பண்ட மூவரு மறிந்தவர்
கண்டமா முனிவோர் கயத்திரி சபத்தோர்
அண்டமா முனிவர் யாவரு மும்மதத்
தொண்டராம் பலரும் தொகுத்துண்பர் முண்டமே. ()

உண்பரே சட்டையை ஒதுக்கி நஞ்சினை
திண்பரே தின்று செரிப்பதற் கரிதாம்
கொன்பரே திக்குக் கொப்பென மாளத்
தன்பரே அவிழ்தத் தயிலமு மாகுமே. (221)

ஆகுமே அவிழ்தத் தருந்தயில மெண்ணெய்யே
போகுமே மனச்சூடு பொங்கிக் குளிர்ந்திடும்
மாகுமே போகம் மகிமைநற் பானுண
வாகுமே யாவும் நல்மூலிப் பிண்டமே. (222)

பிண்டந் தரிக்கால் பெருவயி றூத்தாள்
கண்டவ ரறியார் காணுமற் குண்ணும்
ஒண்டொடி வாடி உயர்பழுப் பேருமுன்
சண்டாளக் கள்ளர் தன்னைத் தரிப்பதே. (223)

தரிப்பரத் தோலினைத் தானுரித் தந்தம்
வரிப்பக் கொண்டதை வாய்க்குநூ லறிகிலார்
சரிக்கத் தரிக்கையில் தான்கட்டும் நூலைப்
பிரிக்க வறிகிலார் பின்னறி வார்களே. (224)

அறிவரோ நூலின் அன்புள பூட்டைத்
தெறிவரோ சட்டையின் கிகாரப் பூட்டுமே
உறிஉறி நாழி வொழுக்கழாக் கெண்ணும்
சறிசெவி டொன்றிரண் டறியார்கள் பாரே. (225)

பார்தெரி வாரிப் பயனுள நூலைச்
சார்வ தெவ்விடம் தானது மெவ்விடம்
பூர்வ தெவ்விடம் புகல்வதெவ் விடமெனத்
தீர்வ தெவ்விடம் தீர்ப்பதெவ் விடமதே. (226)

மாவ தெப்படி மாண்ட பெண்ணிடம்
போவ தெப்படி பொற்கொடி வாழ்க்கை
தாவ தெப்படி சாஸ்திரத் திலையென
ஆவ தெப்படி யலைந்து மாய்வதே. (227)

மாயவர் பிண்டமும் மூண்ட மூந்தலை
சாயல் ரலையெனச் சாம்பிண்ட மென்றுமே
ஆயவ ரண்டத்தில் ஆடிக்கண் மாண்டபின்
ஓயவ ரிருப்பிடம் அறியா மூடரே. (228)

மூடர் காண்பரோ முழுமூலி வாறுதான்
திருடர் காண்பரோ சித்தியண் டத்திற்
குருடர் காண்பரோ கோடிநூல் தேர்ந்துமே
வெருடர் காண்பரோ விந்துவின் மூலியே. (229)

விந்து பிறந்திடம் வீரிய மறிவரோ
கந்து பிறந்திடம் கண்டுணர் லிங்கமே

தந்த நூல் பிறந்திடம் தானறி யாமலே
சந்து பொருந்துதா னழிந்து வெந்ததே. (230)

வெந்தவர் கோடியாம் வேதையிற் சிக்கியே
வந்தவர் கோடியாம் மயில்வெள்ளை கட்டினுல்
பந்தவர் கோடியாம் பறந்தசூ தத்தால்
சந்தவர் கோடியாம் சாஸ்திரம் பார்த்துமே. (231)

பாத்துமே ச்சாஸ்திரம் பயனறி யார்கள்
பூத்துமே விட்டவர் புகல்வது மரிதென
தேத்துமே கெட்டவர் செகதல முழுதுமே
ஆத்துமே பார்ப்பவர் அறிவிலார் நூலே. (232)

நூல் பிறந்திடம் நுகர்ந்து மறிந்துண
சூல் பிறந்திடந் தோணுமுன் கண்ணெதிர்
பால் பிறந்திடம் பட்டுமே கலையதில்
நூல் பறந்தினுங் கரைதெரிந் திலரே. (233)

இலரே அறிவு யிருந்துங் காண்பரோ
வலரே பொருளின் மறப்பைத் தெரிவரோ
கலரே சொலினுங் காண்பரோ கசடர்
குலமே யழிவரோ கொடுமூலி காண்பரோ. (234)

காண்ப ரென்பவர் காயந் துலங்குவார்
மாண்ட ரென்பவர் மானில மோடுவார்
பூண்ப ரெவ்வார் பூசைக் குறிகள்
நூண்பரே மூலியின் நுகந்த வாரிதே. (235)

வாரிதென் றுணர்வோர் வாசவ னவனும்
சீரிதென் றுணர்வோன் செனிப்பனவ் வாறிலை
கூரிதென் றுண்ணிக் கூட்டிய லக்கம்
பேரினி லீவோன் பெருவன மூலியே. (236)

மூலி யிருப்பிடம் மூதண்ட கோளையில்
சாலி யிருப்பிடம் சதமா மவ்விடம்
வாலி யிருப்பிடம் வராதென் வாசமாம்
காலி சூஸ்திரம் காணார்கள் மூலியே. (237)

மூலி யின்னமோ ரமூப்பணி சப்பணி
பாலி யாயியும் பங்கையும் மங்கையும்
சூலி கண்டகண் சூழ்ந்த மத்தியில்
வாலி கண்டதோர் வாயமா முள்ளதே. (238)

உள்ள துரைத்தயென் உணர்ந்தென்ப தறிந்திடு
கள்ள மறிந்து கலைவெரு ளாமலே
பள்ள நீர்ச்செழும் பங்கய தோஷமும்
வள்ள மூலியும் வாழ்ந்து கண்டிடே. (239)

கண்டிடு கண்டிடு காரணக் குறியையும்
உண்டது சொல்வேன் உகந்துமொத் தறிந்திடு
வண்டணி நிறமாம் வாய்த்த தழைமுதல்
கண்டனைப் போலது கருத்த மேனியே. (240)

மேனியில் மேகம் மெய்ப்பூச்சு சாம்பலாம்
தானி நிறமே தவள வர்ணமாம்
பானியின் காந்தி பட்டது சீரிடும்
நானிதை விண்டேன் நவிலாய்சண் டீசனே. (241)

ஈசனு டம்மையும் யின்பமாய்ச் சொன்னது
வாசனுங் கேசனும் வரம்பெற்ற மூலியாம்
பாசனுங் கையிற் பணிபாச மூலியாம்
வாசமே தருமது பெருமர மூலியே. (242)

மரமெனச் சொல்வது மாயச் சூதது
தரைமிசை சித்தர் தானது மறைத்து
வரமூலி வழலை வயங்கிட மறைத்தார்
தரையில்சண் டீசா சாஸ்திரத் திடங்காணே. (243)

காணுவ தரிதெனக் கலங்கவே வேண்டாம்
பூணுமென் னம்பதிற் பிரித்திட்ட நந்தியாம்
சாணது முழமிரண் டானது வடுக்கிலை
வீணது போகா விரிவது கண்டிடே. (244)

கண்டறி சூக்ஷங் காட்டிடு மூலி
விண்டிட யிந்நூல் விரிக்க வஞ்சினேன்

கொண்டிடப் பாசமாம் கோதை சாபமாம்
பண்டிடும் விதிப்பயன் பார்த்து அறிந்திடே. (245)

பார்த்திட மௌனம் பலிப்ப தரிது
சேர்த்திடு மூலி சிவகாமி தன்னருள்
காத்திடக் காணும் காலனு மஞ்சுவான்
நாத்திசை யெங்கணும் நல்மூலி வாசமே. (346)

வாச மிருப்பிடம் வாழிட மெங்கோன்
தாசக் குளிர்நிலம் தனிநிலம் நாலினும்
நேச மாயிடும் நிலவள வாயிடும்
மோச மிலைகாண் மூலியின் போக்கே. (247)

போக்கெனப் பாலையின் பெருமூலி அரிது
வாக்கென மூலியில் வாழ்கற் பூரம்
சாக்கென மருதையிற் சாய்மூலி போகமே
மாக்கென நெய்தல் மூலியாம் பலவே. (248)

பலபல வாசம் பகர்சாதி நாலினும்
கலகல சித்தினி காயாப் பெருமூலி
வலகல சங்கினி வாய்த்தலை மிச்சமாம்
கலகலப் பணியிடு காயப் பாரமாம். (249)

பாரமா மெனப்பணி பத்மினி சத்தியாந்
தாரமா மட்டமாம் தாண்காண மிச்சமாம்
ஆரமே நமதிட மணுகிலார் காரமே
தூர தூரமே கண்டய்ய ரேழுமே. (250)

ஏழு முக்கியம் யெட்டொரு நால்மா
வாழு முக்கியம் வாசமிரு மாகாணி
தோழு மக்கடை சுடர்க்காணி யொன்பதில்
ஈழு முலையாம் யிருகா லெழிலே. (251)

இருகா லெழிலோ யெட்டரைக் காணி
ஒருகால் முக்கால் ஒன்பது காணி
அருகால் நான்மா ஆடுமா யெட்டிற்
சருகா மலமதைச் சாரக் காணே. (252)

காணி யென்பது கண்டறி லக்கமே
வாணி யென்பது வாய்ப்பால் அதனிலே
பூணிக் காண்பவர் போத்துவார் மூலியை
நாணி நிற்பவர் காணுப் பொருளிதே. (253)

பொருளிது வாமெனப் பிரித்தறி வாலறி
அருளிது வாமென ஆய்ந்தாற் காணியாய்
தெருளுவர்க் காகுமென் சிந்தை யுணர்வினுல்
இருள்மூலி வெளியா மென்றறி வாரே. (254)

என்றறி வோர்க்கா யின்னமுங் கேளாய்
குன்றறி பதினேழ் கூட்டுமெய் படியே
ஒன்றறி மெத்த உயர்கண்ட மாவையே
வின்றறி யைம்பத் தொன்றி விருந்திடே. (255)

ஈய்ந்திடக் கண்டே யிகழ்ந்திட வந்ததோர்
சாய்ந்திட மாவைச் சதிரத்தில் மாறி
காய்ந்திட நகாரம் கலந்தடை கோணம்
வாய்ந்திட வகாரம் வாச்சிடப் பாச்சுமே. (256)

பாச்சிட வகாரம் பதிமூன்றில் மையம்
காச்சிட நடுவரை கணக்கிடு மையம்
தோச்சிடு மதனில் துடர்ந்த நடுவரை
ஆச்சிடு கண்டறி அம்மூலி நாமமே. (257)

நாமம் வகாரம் நாயகி சிகாரம்
தாமம் யகாரம் தாங்கு மகாரம்
பாமம் யவ்விதம் படர்மூலி பரமது
ஊமம் மூனறினில் உறங்கு மூலியே. (258)

உறங்குங் காலையில் உணர்வுடை யானறி
திறங்குங் காலையில் சிவந்த வன்னமாம்
பிறங்கும் பிறங்கும் பேய்க்கூத் தாடிடும்
இறங்கும் மாநிலத் தியாவரு மகிழ்வரே. (259)

மழுவரே மங்கள மாமிது வென்னத்
தொழுவரே கயிலையின் தொண்டர்க்குத் தொண்டராம்

வழுவிலா யாவரும் வாக்கமு தருந்தவே
பழுதிலா யானுரை பாசமா மூலியே. (260)

பாசநல் மூலியால் பாஷாண முடங்கும்
வாசனைப் பூவால் வாய்க்கும்வெண் ணீராம்
காசகாய் விந்திற் கட்டுமே சூதம்
தோசநற் காயில் தூளியாஞ் சூதமே. (261)

சூத மடங்கித் துருசின் வாறுகேள்
வாத மண்டம் வதைத்திடு கட்டாய்ப்
பேத நடுக்கம் பிறந்திடுந் துரிசை
வேத சாரம் வீரிடுந் திங்களே. (262)

திங்க ளொன்றிற் சிறந்த பிண்டமாம்
மங்கச் சாரத்தை மடக்கிக் கட்டிடும்
பொங்கத் தந்தில் பொய்த்து நீத்திடும்
மங்கைச் சிலையில் மடியுமெட் டெட்டுமே. (263)

எட்டுடன் செம்பு யின்பக் களங்கறும்
தொட்டது மூலி துளிர்பால் போக்கிடும்
கெட்டநல் வங்கம் கிளருதி ரத்திற்
பட்டிட அயமும் பலவுமாண் டிடுமே. (264)

மாண்டவர் காண்பரோ மாய மூலியை
பூண்டவர்க் கொக்குமே பொலிவான் சூத்திரம்
ஆண்டவர்க் கருளும் புரிபவர்க் காகுமிக்
காண்டமென் னூலிது கடைமூன் றூருமே. (265)

மூன்றூ றுமென மொழிந்த நந்தியான்
இந்நூற் பிரிவினைக் கிடவன்ப தென்றறி
என்னூ லாண்டு யிதையறி வோர்க்குப்
பொன்னூர் மவுனம் பூண்பவர் காண்பரே. (266)

காண்பரே தந்திக்ககன மூவாயிரம்
வீண்ப தெண்பதை வெருந்திப் போகா
நாண்ப தத்தனை நல்மூலி யாகிடும்
வாண்பதி மருந்துடன் வசியசித் தாகுமே. (267)

சித்தாகும் யோகந் திறந்தரும் போதம்
வித்தாகும் பூரணம் விடுபில்லி சூனியம்
எத்தாகுஞ் சால மிடுமஞ்சட் காவி
சத்தாகுங் கெவுனம் சதானந்தி போதமே. (268)

போத மருந்தலாம் புணர்மூலி சேர்க்கையிற்
சூத மறிந்திலார் தொழிலிது காட்டும்
நாத சாலமும் நாயகி வாழ்க்கையும்
பாத பங்கயன் பலிபீடங் காண்பரே. (269)

காண்பரே அண்டத் தந்தியாற் பலவும்
பூண்பரே கற்பம் பொலிக்கடை கட்டை
ஊண்பற் குதிரை யுவந்த நடைவழி
பாண்பரே செக்கர் பாணமும் ஏறுமே. (270)

ஏறு மவ்வழி யிருவழிப் பூட்டது
கூறு சண்டனைக் கூற்றாய்க் கொண்டிடும்
மாறு கொண்டிடில் மாய்க்கும் லோகமே
தேறு மிக்குணம் தெரிவ துண்மையே. (271)

உண்மையாந் தந்தியில் ஒருகோடி கொண்டு
நன்மையாம் புங்கவன் நல்லெட்டுப் பெருவிரல்
வன்மையாய்ச் சீவி வாங்குபால் வீசம்
தொண்மையாய்த் தந்தியைத் தொகுத்தது விட்டே. ()

இட்டதை வைப்பா யிளங்கதிர் மட்டும்
பொட்டென வெடுத்துப் புரிநிழல் வைப்பாய்
சட்டென வரளச் சார்ந்தது பாருபின்
கட்டளைப் படியாய்க் கடுகெள் ளெண்ணெய்யே. (273)

எள்ளெண்ணெய் காணியும் யிகமதிற் கூட
வள்ளலாம் மூலிதோல் வளரெழு விரலாம்
கள்ளமா யதையுங் கண்டித் திடுமதில்
உள்ள மருந்திட் டடனெரி தீயே. (274)

தீயிடு முத்தெண்ணெய் சிமிழின் நிறமாய்
ஈயப் பட்டைகீழ் யெரிந்திடப் பொங்கியே

ஒயிடு மடங்கி உதிரக் கட்டியாம்
நீயெடு பார்த்து நினைத்த தருந்துமே. (275)

அருந்துந் தேன்விட் டரைத்தெடு கட்டியை
வருந்துநற் சிப்பியில் வைத்திடு பதனமாய்த்
திருந்துநல் வங்கினி தீட்டிடு யெமலீ
வருந்தி வருந்துனே வணங்குவார் பாரே. (276)

பாரே கிழங்குப் படிநரம் போசையில்
தீரே வங்கினி திலதத்தின் வோசையில்
ஆரே யடிபட் டாடுவார் நிலப்பயிர்
சேரே பகைஞர் சிதறுவா ருனக்கே. (277)

உனக்கே யுரைத்தது உண்மையா மென்றறி
எனக்கே வாய்ப்ப தென்றிசை நந்தியாம்
மனக்கூர் காண வரமாய்க் கூட்டிதாம்
தனக்கே தன்னருள் தருவது சாந்தமே. (278)

சாந்தமா யின்னமோர் தாபரங் கேளு
காந்த மென்றொரு கள்ளியின் பட்டையை
வாந்த சூத மதக்கிரு பலமாம்
தாந்ததண் டக்கொடி சரிவிதங் கூட்டே. (279)

கூட்டியே நெகிளக் குழப்பி யரைத்தெடு
ஆட்டியே மேதைக் கொம்பினி லடைத்து
மூட்டியே தீயை முடிக்கிடு வெந்தபின்
சாட்டிய வித்தெடு சத்தளம் காணவே. (280)

காணவே புத்தின் கடும்புது கரோடியைத்
தோணவே கொண்டு தொலைத்தெடு பூசையில்
மாணவே சமனிடை மாட்டுமுன் மருந்தை
ஊணவே கூட்டி யொட்டி யரைத்திடே. (281)

அரைக்கயிற் சுண்ண மதுஒன்று மாட்டிச்
சிரைக்கமி யென்று சேருடன் வழித்து
தரைக்குள் மேதை தன்கொம்பில் மாட்டிடு
மறைத்தநற் பொருளை மாதர்க்கி தாகுமே. (282)

ஆதியா மஞ்சள் அன்புள்ள யெமலியைப்
பாதியாம் பிறையிலே பகர்ந்திடு கொண்டு
சாதியா மதனிற் றட்டிடு முத்தெண்ணெய்
மாதியா மஞ்சனமாலேவிட் டறிந்திடே. (283)

அறிந்திடக் காணும் ஆழிசூழ் புவியினிற்
சொறிந்தநற் பொருளும் துலங்கவே காணும்
யெரிந்தநல் லெமலியா யெங்குமே துலங்கும்
விரிந்தநற் பார்க்குள் விளங்கும்நா வலரே. (284)

நாவல செங்கணும் நானிலப் பூங்கொடி
காவல ரேசக் கணங்களுங் காச்சின
கோவல ரிந்திரக் கோமான் குடிமனே
மாவலஞ் சேர்த்திடு மையின் குணமதே. (285)

குணமென்ன நந்தியான் கூரிய யிம்மொழி
மனமெனச் சேர்வோர் மகிழ்வரே சத்தியால்
தனமென வேதன் சாபம்பொல் லாது
நினமனக் குறுதி நியமமா யறிவதே. (286)

அரிவதே யின்னமோ ரதிசயங் கேட்டிடாய்
செரிவது சண்டீசத் தெய்வமே மவுன
சரிதையில் நின்றறி சத்தியந் தேவியாம்
பிரிவது அரிதெனப் பேசுவோர்க் காகுமே. (287)

ஆகுநல் லண்டத் தறிந்ததோர் தந்தியிற்
பாகுநற் சீனியிற் பகர்பசும் பாலுடன்
வேகுடன் யிரண்டிட வெந்து குடிப்பிர
மாகுநற் போகம் அளவிலா லீலேயே. (288)

அளவிலாப் போகமு மாகுமே சாமமும்
தளவிலா மூலிபின் சாமப் படியாம்
உளவிலார் காணார் உயர்ந்தநன் னூட்டை
களவிலாப் போக்குங் கண்டறி போகமே. (289)

போகமும் யாகமும் பொருமையாற் காண்பது
தாகமுஞ் சோகமுந் தன்னு லறிவது

பாகமும் வாகமும் பகர்வர்ணந் தோன்றினால்
யோகமுந் தேகமும் உண்மையா லறிவதே. (290)

அறிவ தறிவினால் ஆசா னொருவனால்
பிறிவ தெந்தவார் பிரணவ சூட்சமே
குறிவ தெந்தெனக் குண்டலி பூசையால்
அறிவறி மூன்று மாதியாங் கண்டிடே. (291)

கண்டிடப் பொற்றலை காளியுந் தந்தியும்
சண்டிட லோகஞ் சரியிடை கொண்டு
வண்டிப் பாலில் வைத்திடச் சுண்டபின்
கொண்டிடத் தூளாய்க் கூட்டு சீனியே. (292)

கூட்டு சீனியோ கூட்டுநா லத்தொரு
மாட்டு பசுநெய் மகிழ்பச்சை யாயிக்கு
ஓட்டிப் பிசைந்திட ஒக்கக் கட்டியாம்
வாட்டுக் கஞ்சியாம் வாய்க்குண வாகவே. (293)

உணரு யுண்பதே யோகமாம் புத்தி
நிணருய் நிற்பதே நெடுமண் டலமாம்
குணருய் பூரணக் குண்டலி யேறிடும்
மணருய் சத்தியும் மகிழ்கற்ப மாச்சுதே. (294)

மாச்சென்ற கற்பம் மகிழ்ந்தருந் தவர்க்குப்
பாச்சென்ற யோகம் பாயுமே சட்டை
ஆச்சென்ப தின்று வாயிர மேலதாம்
போச்சென்ற மரையிற் பூரண மாறியே. (295)

மாறிடுந் தொல்லை மனமுறுதி யாகும்
வேறில்லை சண்டனே வேதனும் நீயாம்
கூறிடு மஷ்ட கோணநல் முனிவனாய்
தேறிடுங் கற்பத் திறமையில் வாசியாம். (296)

வாசியி லேறிடு வாய்ப்ப துனக்கெலாம்
ஊசியிற் காந்தமாம் ஒட்டுமென் னாலிது
வேசியின் வாழ்க்கைபோல் வீணர்க் கருந்துமோ
காசியிற் காணலாங் கடுமூலி சூக்ஷமே. (297)

சூச்சமாய்ப் புத்தி சூக்ஷ மறிவோர்கள்
மோச்சமாய் நந்தி மொழிந்தமுந் நூறினிற்
காச்சியாங் கண்டவர் காணுமே கண்டது
வாச்சி சகோதரி வாழிடஞ் சேருமே. (298)

சேருமென் றியம்பிய செயலறி யாமலே
வேருளங் கொண்டிட வேதனுஞ் சத்தியாய்
பூருள பூரணம் பொருந்தா தென்றறி
நாருள மூலியால் நல்லர சாகுமே. (299)

அரசனும் நந்தி ஆதியாய் வகுத்தவர்
வரசே ரிம்மொழி வடநூ லறிமன
இருசத மென்னூ லியன்ற மூன்றிலுங்
கரசமாய்க் கொண்டபின் காட்சியிந் நூலே. (300)

நூலினி லுகந்தது நுணர்சண் டீசனே
பாலினி லவ்வணம் பகர்வதா மூணரை
சாலிநற் பானை தாங்கிய சத்தி
வாலிதன் னருளால் வாழ்வரே மாண்பர். (301)

மாண்ப ரென்பதே மறையவர்க் காகிடும்
காண்பரே யோகம் கண்டிட நந்தியான்
பூண்பரே சக்கரம் பொருளிது மூவரும்
ஊண்பவ மகற்றி உயர்நிலை வாழ்வதே. (302)

நிலையில் நின்று நிகண்டுமுந் நூறையும்
கலையில் நல்ல கலைக்யான மாயிரம்
அலையாக் காவியம் ஆயிரத் திருநூறும்
துலையிரு நூறும் சூஸ்திரங் கண்டிடே. (303)

கண்டு தேறு கருக்கடை முந்நூறு
விண்டு சொல்லும் வினையமு மைம்பது
உண்டு மெண்பதும் உற்ற அறுபதும்
கொண்டு பாருநீ கோர்வைநூ லாமிதே. (304)

**நந்தீஸ்வரர் நிகண்டு ௩௱,**

முற்றிற்று.

உ

முருகன்றுணை.

# நந்தீஸ்வரர் கருக்கடை நாக்கு

## சூஸ்திரம் ௩௰.

பூரண மான பொன்னடி மூலம்
காரண மான கணபதி சத்தி
சாரணே மேலாய்ச் சார்ந்திடுஞ் சத்தி
ஆரண ஞானத் தடிமுடி காப்பே. (1)

காப்பது யீசன் கருணையி ஞலே
கூப்புடன் வாதக் குறிதெரிந் திட்டேன்
சேர்ப்பது தானே தெளிவுமுந் நூறைப்
பார்ப்பவர்க் கல்லோ டலித்திடுஞ் சித்தியே. (2)

சித்தியாம் நந்தி தேவனென் றென்பேர்
அத்தனர் கூப்பிட் டருளினர் வாதம்
பெத்ததி ஞலே பெரெனக் காச்சு
முத்தமி ழதனல் மொழிந்தமுந் நூறே. (3)

முந்நூறில் ஞான யோகமுஞ் சொன்னேன்
முந்நூறில் வாதப் புலன்வெளி விட்டேன்
முந்நூறில் தீட்சை முக்கியஞ் சொன்னேன்
முந்நூறு மிந்த முப்பதில் முடிவே. (4)

முடிவான யீசன் மொழிந்திடும் நூல்போல்
அடியே னுடஜன காதிபர் நூலும்
படிமீதில் ரோமன் பாடிய நூலும்
நெடியதா மிவைகள் நேராகு மொன்றே. (5)

ஒன்ருன மூலெ னுரைத்திடும் நூலும்
கன்ருன கொங்கணன் காட்டிய நூலும்
குன்ரு தகத்தியன் கூறிய நூலும்
தன்ருமல் மூன்றுஞ் சரியென்ப தாச்சே. (6)

ஆச்சுது கருவூ ரானவன் சொல்லும்
விச்சுரை ராமன் விசிய நூலும்
தாச்சியில் லாமற் சரியென்று தோன்றுங்
காச்சியின் பாடல் காலாங்கி தானே. (7)

காலாங்கி மச்ச முனிநூ லிரண்டும்
பாலுள் நெய்போல் பார்ப்பவர்க் கொன்றாய்
ஞாலமா மீதில் நவின்றது போகன்
மூலமாஞ் சட்டை முனிமொழி யொன்றே. (8)

மொழிந்திடும் மற்ற மடபதி யெல்லாம்
தெளிந்திடும் நூல்கள் சிறிதாக ளுண்டு
குளிர்ந்திடும் நூலைக் குகைக்குள் மறைத்தார்
நெளிந்திடுஞ் சொல்நூல் நிரம்பவு முண்டே. (9)

உண்டுகாண் மற்ற சித்தர்க ளெல்லாம்
கண்டுகண் டையா கட்டினார் நூல்கள்
விண்டுசொல் லாது வேடிக்கை வாதம்
தொண்டர் பார்த்துச் சுழன்றலை வாரே. (10)

அலைவதல் லாது ஆதியின் நூலை
தலைகடை கண்டு சார்ந்திட மாட்டார்
புலையர்க ளெல்லாம் பொருள்கண்டோ மென்று
குலைகடி நாய்போற் கூக்குரலாச்சே. (11)

ஆச்சுது வானத் தமர்ந்தவின் தாலே
மீச்சுர உப்பு மெத்தவுண் டையா
பாச்சிது கோடி பலபல உப்பில்
தீச்சுட ருப்புத் திருவித மென்னே. (12)

என்னவே வானத் திடியினி லொன்று
சொன்னதோர் பூமிச் சூலினி லொன்று
கன்னிற மான கடலினி லொன்று
முன்னவர் சொன்ன மூன்றுமுப் பூவே. (13)

பூவிது வாய்வு அங்கியு மப்பும்
ஜீவனென் றெண்ணிச் செப்பின தாலே

மாவெனு மிடையின் கலைசுழி மூன்றும்
தேவியிற் குள்ளாய் தெரிந்தறி வீரே. (14)

அறிவது முத்துப் பவளமும் நீலம்
குறிதெரி யாமற் குருடர்க ளெல்லாம்
வெறிகொள்ளுந் தோழிகள் விண்காரி சுட்டு
எறியினில் வீழ்ந்த பீசல்கண் டீரே. (15)

ஈராறு மொன்றும் ஈரெட்டு மொன்றும்
சேராத வீணர் ஜெபம்பண்ணு வார்கள்
கூரான வாசியைக் குருவாகக் கண்டத்துள்
நேரான போது நிலைக்குமெய்ஞ் ஞானமே. (16)

நிலைக்கு மூலத்தில் நிற்கின்ற வாசியைத்
தலைக்குள் ளாகத் தமர்கொண் டிருந்திடும்
மலைக்குமோ சும்மா மனக்குரங் கையா
கலைக்கும் பொழுதிற் கனல்பிற வாதே. (17)

கனலாஞ் சுழிமுனைக் கால்கொண் டிருந்திடப்
புனலாகு மிந்து பூரண மாய்விடும்
தனியான யோகச் சமாதியு மெய்திடும்
வனவாச மென்ன மானிலந் தானே. (18)

மானிலந் தானே வரையி லிருப்பதும்
தானிலந் தானே தரையி லிருப்பது
தேனிற் பிரணவஞ் சிங்குவங் கேறில்
ஊனில மான வுயிர்சிவ மாமே. (19)

உயிர்சிவ மானல் உடல்சிவ மாகும்
பயிர்விரை யானல் விரைபயி ராகும்
பயில்வது மொன்றே பாடலு மொன்றே
தயிரிய மதனைற் றுனறி வீரே. (20)

சவுக்கார உப்பு.

தானு மிகுந்த சவுக்கார உப்பையும்
நானுமுன் நூறில் நயம்படச் சொன்னேன்
தேனுன உப்பைத் திராவகஞ் செய்தால்
வானு மகண்டம் வழிகாண லாச்சே. (21)

வழிகாண வழலைச் சவுக்கார நீர்தான்
சுளுவாயிந் நூலிற் சொல்லுவேன் மூலம்
பழியாமல் நானும் படித்தமுந் நூறில்
நெளியாமல் நிற்கும் நிறைசவுக் காரமே. (22)

சவுக்கார வைப்புச் சாரநீர் வைப்பும்
சிவக்காது மஞ்சளிற் சென்றாலு மையா
தவக்கார ரல்லோ தான்முடிப் பார்கள்
பவக்கார னுக்குப் பலியாது காணே. (23)

காணாது யிந்தக் கருவெல்லா மையா
வீணாக லோகர் மெத்தவுஞ் செய்வார்
தோணாமல் வாதஞ் சுட்டிடத் தோஷமாய்
மாணா வுனக்கு மார்க்கம்விண் டோமே. (24)

மார்க்கமுந் நூறில் வைத்திடுஞ் சாரம்
ஏர்க்கப் பலமொன் றெடுத்திடு கட்டியாய்
காக்குமே சீனக் கார மரைப்பலம்
தீர்க்க மிணங்கன் சேர்த்திடு நாலுமே. (25)

நாலா முருவியும் நாவி யரைப்பலம்
கோலா மழ்ரி சூர்மை யரைப்பலம்
வேலாவின் பட்டையில் வேர்த்திடும் நீரைச்
சாலா மதில்விட்டுச் சரக்கெல்லாஞ் சாரியே. (26)

சாரித்துக் குப்பியிற் றானரை மட்டாய்ப்
பூரித்து மேலே பொருந்திவை குப்பியை
காரித்து வாரம் நடுவில் விலாப்புறம்
மாரித் துவைத்து மண்சீலை செய்திடே. (27)

சீலையைச் செய்து தீயடுப் பேற்றிடு
வாலையை வணங்க வந்திடும் நீர்தான்
ஆலயத் துள்ளாய் அமர்ந்திடுஞ் சத்திதான்
வேலையின் நீர்போல் விதநிற மிந்தே. (28)

நிறமிந்த நீரை நீகாரக் காலே
உறமென்ற குப்பி யொன்றது வாங்கி

வறமென்ற நீர் வார்த்திடு குப்பியில்
அறமெனக் குருவண் டஞ்சது போடே. (29)

அஞ்சது போட்டு அடைத்திடு வாய்தனைப்
பஞ்சதி னாலே பார்த்திடு கவசமாய்
வஞ்ச வுவர்க்குள் வைத்திடு மண்டலம்
கெஞ்சுஞ் சரக்கு கிறுகிறுப் பாமே. (30)

ஆமே யிவைசவுக் காரத்தின் நீரால்
ஓமே யிருதார் சிங்கியி லூட்டியே
வாமே சுண்ணம்பில் வைத்திட் டெரித்திடத்
தாமே நிறைந்த சற்குரு வெண்ணே. (31)

குருவினிற் பச்சைத் துருசது சுண்ணம்
குருவினி லெண்ணெண் சரக்குகள் சுண்ணம்
குருவி னுபரசக் கூட்டமி தெல்லாம்
குருவது வாகிக் கோலமு மாமே. (32)

கோலமி தென்னுங் குருவிதி னாலே
காலனு மில்லை கலியனு மில்லை
பாலெனு மமுதப் பானமு முண்டாம்
மூலமு மிதுதான் முப்பதும் முற்றே. (33)

நந்தீசர் சூஸ்திரம் 33 முற்றிற்று.

உ

குமரன் றுணே.

# பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

# வைத்திய, வாத, யோக, ஞான சாஸ்திர

## கோர்வை நூல்களின் விபரம்.

---

ஐயா! உலகத்தோர்கள் உய்யும்பொருட்டு ஒவ்வொரு மகரிஷிகளும் முனிவர்களும் சித்தர்களும் வைத்திய, வாத, யோக, ஞான சாஸ்திரங்கள் கோர்வை கோர்வையாக எத்தனையோ நூல்களைச் சொல்லி யிருக்கிறுர்கள்.

அவைகளில் அனேக மகான்களுக்கு கோர்வை நூலாக அகப்படாமற் சில நூற்கள் கிடைத்தும் சிலநூற்கள் கிடையாமலும் தேடித்திரிவது யாவருக்குந் தெரிந்தவிஷயமே.

அக்குறையை நிறைவேற்றும் பொருட்டு அனேக மகான்களுடைய உதவியினுல் ஷை சாஸ்திரங்களையெல்லாம் ஒன்று சேர்த்து கோர்வை நூலாக்கி அச்சிட்டுக்கொண்டு வருகிறது யாவரும் அறிந்த விஷயமே.

அதில் தற்போது நந்திஸ்வரருடைய சாஸ்திரங்களின் கோர்வை நூலை அச்சிட்டுக்கொண்டுவருகிறேன் முடிந்தபின் விலை விபரந் தெரிவிக்கலாகும்.

### நந்தீஸ்வரர் கோர்வை நூல்களின் விபரம்.

| | |
|---|---|
| நந்தீஸ்வரர் சிவவர்கட வைத்திய சாஸ்திரம் | ௨௩ |
| ஷை வைத்தியகாவியம் | ௩௱ |
| ஷை கலைக்கியானம் | ௩ |
| ஷை கருக்கடை | ௧௱ |
| ஷை நிகண்டு | ௧௱ |
| ஷை குருநூல் | ௨௱ |
| ஷை ஞான சூத்திரம் | ௱ |
| ஷை தண்டகம் | ௱ |
| ஷை வைத்தியம் | ௮௰ |
| ஷை வைத்திய சூத்திரம் | ௯௰ |
| ஷை சங்கம விளக்கம் | ௪௨ |
| ஷை வைத்தியம் | ௪௰ |

| | |
|---|---|
| நந்தீஸ்வரர்முப்பு சூஸ்திரம் | ௧௭ |
| ஷை கருக்கடை நாக்கு சூஸ்திரம் | ௧௰ |
| ஷை வைத்தியம் | ௧௨ |
| ஷை உபதேசம் | ௨௪ |
| ஷை சூஸ்திரம் | ௰௫ |
| ஷை பூஜாவிதி | ௰௨ |
| ஷை பிரணவசூஸ்திரம் | ௰௨ |
| ஷை முப்பு சூஸ்திரம் | ௰௨ |
| ஷை விஷகுளிகை | ௮ |
| ஷை அட்டமாசித்தி | ௫ |
| ஷை ஜீவஉற்பத்திசிந்தாமணி | |

இப்படிக்கு,

**இ. ராம. குருசாமிக்கோன்,**

புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை.

பரமபதி துணை.

# வைத்திய, வாத சாஸ்திரங்களின்

## விளம்பரம்.

| | |
|---|---|
| அகஸ்தியர் பரிபாஷை 300 | 0-10-0 |
| பரிபாஷை மூலிகை வெளிப்படை அகராதி | 2-8-0 |
| தெட்சணாமூர்த்தி திருமந்திரம் 1500 | 1-4-0 |
| ரோமரிஷிபரிபாஷை 300 | 0-10-0 |
| யாகோபு வைத்திய சிந்தாமணி 750 | 1-4-0 |
| ஷை யார் லோகசெந்தூரம் 300 ... ... | 0-10-0 |
| ஷையார் சுண்ணம் 300 | 0-10-0 |
| ஷை சாஸ்திரம் மூன்றுக்கும் சூஸ்திரம் 200 | 0-8-0 |
| கருவூரார் வாதகாவியம் நொண்டி 700 | 1-0-0 |
| நந்தீஸ்வரர் [illegible] 310 | 0-10-0 |
| தன்வந்திரியார் கெருடாரூடம் கெருட பஞ்சாட்சர ஆரூடம் சத்தி யாரூடம் மந்திர சக்கரங்களுடன் மூன்றுஞ் சேர்ந்து ஒரே பயிண்டு ... ... | 0-10-0 |
| உரோமரிஷி நாகாரூடம் சிவாரூடம் தேவியாரூடம் சக்கரங்களுடன் மூன்றுஞ்சேர்ந்து ஒரேபயிண்டு | 0-10-0 |
| கௌசிகர் சர்ப்ப ஆரூடம் மந்திராரூடம் சித்தாரூடம் மந்திர சக்கரங்களுடன் மூன்றுஞ் சேர்ந்தது | 0-10-0 |
| இந்த ஒன்பதாரூடம் சேர்த்து ஒரே பயிண்டு | 1-8-0 |
| திருமூலர் சுப்பிரமணியர் சாஸ்திரத்திரட்டு | 1-0-0 |
| கடைப்பிள்ளை புசுண்டர் சாஸ்திரத்திரட்டு | 1-0-0 |
| மச்சமுனி வசிஷ்டர் சாஸ்திரத்திரட்டு | 1-0-0 |
| சுந்தரானந்தர் கொங்கணர் சாஸ்திரத்திரட்டு | 1-0-0 |
| இராமதேவர் தன்வந்திரி சாஸ்திரத்திரட்டு | 1-0-0 |
| சட்டைமுனிவர் சிவபெருமான் சாஸ்திரத்திரட்டு | 1-[illegible]-0 |
| உரோமரிஷி திருமூலர் சாஸ்திரத்திரட்டு | 1-0-0 |
| கருவூரார் சுந்தரானந்தர் சாஸ்திரத்திரட்டு | 1-0-0 |
| அகஸ்தியர் அமுதக் கலைக்கியானம் 1200 | 1-0-0 |
| ஷை பரிபூரணம் 205 சூத்திரத்துடன் | 0-6-0 |
| ஷை பூரண சூத்திரம் 216 | 0-6-0 |
| ஷை வைத்தியரத்தினச்சுருக்கம் உரையுடன் | 0-8-0 |
| ஷை செந்தூரம் 300 | 0-8-0 |
| சட்டை முனிவர் ஞானம் | 0-6-0 |
| பிரமமுனிவர் வைத்தியம் 330 | 0-8-0 |
| புலிப்பாணி வைத்தியம் 500 உரையுடன் | 0-10-0 |
| ராமதேவர் சிவயோகம் 200 | 0-6-0 |
| சுப்பிரமணியர் ஞானம் 200 | 0-5-0 |
| ஷை ஞானம் 500 | 0-10-0 |
| பூகிமுனிவர் வைத்தியம் 800 | 0-12-0 |
| நந்திக்கருக்கடை 300 | 0-10-0 |
| திருவள்ளுவர் நவரத்தின சிந்தாமணி 800 | 0-12-0 |
| வயித்திய சாரசங்கிரகம் திக்கு நயம் | 1-4-0 |
| அகஸ்தியர் வைத்திய காவியம் 1500 | 0-12-0 |
| ஷையார் பாலவாகடம் 300 | 0-4-0 |
| ஷையார் குருநாடி சாஸ்திரம் 235 | 0-2-6 |
| ஷையார் கன்மகாண்டம் 300 | 0-4-0 |
| ஷையார் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360 | 0-3-0 |
| தெட்சணாமூர்த்தி ஜாலசூஸ்திரத்திரட்டு 500 | 0-6-0 |
| சுப்பிரமணியர் ஞானம் 200 | 0-2-6 |

☞ இ. ராம. குருசாமிக்கோன்,

புத்தகஷாப், புதுமண்டபம் மதுரை.